விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(வி-2625)

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 20 வெள்ளிக்கிழமை (06.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

# தமிழ் அரசியல் கைதிகளில் 32 பேர் திங்களன்று விடுதலை



## சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளில் 32 பேர் எதிர்வரும் 9ஆம் திகதி விடுதலை செய்யப்பட உள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார். மேலும் 30 பேர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாக விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்புக்கு ஜனாதிபதி விஜயம்


(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற கட்டடத்தையும் நவீன கேட்போர் கூடத் தையும் திறந்துவைப்பதற்காகவே ஜனாதிபதி அங்கு செல்லவுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் அழைபபின் பெயரிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் மட்டக்களப்புக்கு சமுகமளிக்கவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்க தலைவர் சட்டத்தரணி வி.வினோபா இந்திரன் தெரிவித்தார். (எ-11)

## அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கே தேசிய அரசு



### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே தேசிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விசேட உரையின் ஊடாக பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். உலக சந்தையில் தற்

24ஆம் பக்கம் பார்க்க

## சம்பந்தனின் அறிவிப்பை கைதிகள் நிராகரிப்பு!

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அறிவிப்பை சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எதிர்த்துள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலை என்ற விளம்பரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கெனவே தம்மை விடுதலை செய்யக்கோரி 253 அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த 12ஆம் திகதியில் இருந்து 6 நாட்களாக இந்த போராட்டம் இடம்பெற்றபோது உறுதிமொழியை வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த உண்ணாவிரதத்தை கைவிடச் செய்தது.

இந்தநிலையில் நேற்று 32 பேர் எதிர்வரும் 9ஆம் திகதியும் 30 பேர், 20 ஆம் திகதியும் விடுவிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் இணங்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அறிவித்துள்ளார்.

எனினும் இதனை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்துள்ள தமிழ் அரசியல் கைதிகள், விரைவில் தாம் தமது விடுதலையை கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்

24ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற விசாரணைக்கு அவுஸ்திரேலியா உதவும்!

### அந்நாட்டு அரசு உறுதியளிப்பு

இலங்கையில் இரண்டு தரப்பும் மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்படும் சர்வதேச குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதில் அவுஸ்திரேலியா உறுதியாகவுள்ளது.

இந்த நிலையில் அதற்கான உதவிகளை அவுஸ்திரேலியா வழங்கும் என்று அந்த நாட்டின் உய

23ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா குழு வடக்குக்கு விஜயம்

(கொழும்பு)

காணாமல்போதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்ய உள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## சுமார் 12 கோடி ரூபா நிதி ஆளுநர் தற்துணிவு நிதியத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

மாகாண விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், காணி திணைக்களம், கூட்டுறவு திணைக்களம், ஆளுநர் செயலகம் ஆகியவற்றிலிருந்த சுமார் 11 கோடியே 62 லட்சத்து 92ஆயிரத்து 560 ரூபாய் நிதி ஆளுநர் தற்துணிவு நிதியத்திற்கு மாற்றப்பட்டமை தொடர்பாக மாகாண பொதுக்கணக்குகள் குழு கண்டுபிடித்துள்ளது,

குறித்த நிதியை அந்தந்த அமைச்சு மற்றும் திணைக்களங்கள் வட

24ஆம் பக்கம் பார்க்க

## கைதிகளின் விடுதலையை கோரி கூட்டமைப்பு எம்.பிக்கள் கடிதம்

### ஜனாதிபதி பிரதமருக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் நாளை சனிக்கிழமைக்கு முன்பாக விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் 16 பேரும ஒரு கையொப்பமிட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக, பல தடவைகள் தங்களின் கவனத்துக்கு நாங்கள் கொண்டு வந்துள்ளோம். ஆனால் இன்று

24ஆம் பக்கம் பார்க்க

## அறிவினால் சாதிக்கும் வடபுலத்து மக்கள்!

### கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் புகழாரம்

(மட்டக்களப்பு)

வடக்கு மக்கள் ஆயுத யுத்தத்தினால் சாதிக்க முடியாததை அறிவு யுத்தத்தினால் தற்பொழுது சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள் என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குப்பட்ட வாழைச் சேனை இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு

24ஆம் பக்கம் பார்க்க

## நாடு திரும்பினார் ஜனாதிபதி



தாய்லாந்துக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்

23ஆம் பக்கம் பார்க்க

## எச்.என்.டி.ஏ கற்கைநெறி பட்டப்படிப்புக்கு ஒப்பானது

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தேசிய உயர்கல்வி கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறியை பட்டப்படிப்பிற்கு இணையானவை என அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் உயர்கல்வி அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் முன்மொழிந்த பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விடயம் குறித்து மாண

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாதுகாப்புத்துறையில் பாரிய மோசடிகள்

## ட்ரான்பரன்ஸி இன்டர்நசனல் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்பு துறையில் அதிகளவு மோசடிகள் இடம்பெற்று வருவதாக லண்டனை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ட்ரான்பரன்ஸி இன்டர்நசனல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புத்துறையில் இலங்கையில் அதிகளவு மோசடிகள் இடம்பெற்று வருவதாகவும், பாதுகாப்புத் துறை மோசடிகளில் இலங்கை அதி உச்ச அபாயகரமான நாடுகளின் வரிசையில் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழல் மோசடிகளை தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

எனினும் பாதுகாப்புத்துறையில் காணப்படும் ஊழல் மோசடிகளை எவ்வாறு கண்காணித்து அதனை இல்லாதொழிப்பது என்பது சவாலான விடயமே என சுட்டிக்காட்டியுள்ளது.

சில உயர் இராணுவப் பதவிகளுக்கு குடும்ப அல்லது நட்பு ரீதியான அடிப்படையில் நியமிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தொடர்பிலான கொள்வனவுகளின் போதும் வெளிப்படைத்தன்மை காணப்படுவதில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# வடமாகாண மலர்க் கண்காட்சி கார்த்திகைப்பூ சூடி ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விவசாய அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட மலர்க் கண்காட்சி கார்த்திகைப்பூ சூடி நேற்று வியாழக்கிழமை (05.11.2015) நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இதனைத் தொடக்கி வைத்தார்.

வடமாகாணசபை கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடித்து வருகிறது.

இதன் நடவடிக்கைகளில் ஒன்றாக நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மலர்க் கண்காட்சியில் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் முன்னணியில் உள்ள தாவர உற்பத்தியாளர்கள் 16 காட்சிக் கூடமொன்றை அமைத்துள்ளனர். மாகாண விவசாய திணைக்களமும் தனியான காட்சி கூட மொன்றை அமைத்துள்ளது.



இக்காட்சிக் கூடங்களில் எல்லா விதமான பயன்தரு மரக்கன்றுகளும், வண்ண மலர்ச்செடிகளும், பல்நிற இலைச்செடிகளும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை பார்வையிடவும், வாங்கிச் செல்லவும் எனத் தொடக்க நாளிலேயே ஏராளமானோர் அங்கு சென்றிருந்தனர். இக்கண்காட்சி எதிர்வரும் 11 ஆம் திகதி புதன கிழமை வரை தினமும் காலை 9 மணியில் இருந்து மாலை 7 மணிவரை இடம்பெற உள்ளது.

இக் கண்காட்சி தொடக்க நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் அனைவரும் கார்த்திகைப்பூ சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# தீபாவளிப் பண்டிகைக்கு முன் இந்திய மீனவர்கள் விடுதலை

## நீரியல் வள அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கான தமது விருப்பத்தை சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று தெரிவித்தார்.

இதன்படி, இலங்கை சிறையிலுள்ள 126 இந்திய மீனவர்களும் தீபாவளி பண்டிகைக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்கள் என அமைச்சர் குறிப்பிட்டார்.

சட்ட மாஅதிபர் திணைக்களம் தமது விருப்பத்துடனான கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, இந்திய மீனவர்களின் விடுதலையை வெகுவிரைவில் உறுதி செய்வதாகவும் அவர் கூறினார்.

தமிழக அரசியல்வாதிகளின் அழுத்தங்களினால் இந்த மீனவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

இந்திய மத்திய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக மாத்திரமே இவர்களை விடுதலை செய்ய தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டார். (எ-11)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# இளைஞர் கிளர்ச்சி வெடிக்கும் நாடாளுமன்றில் சம்பிக்க எச்சரிக்கை



(கொழும்பு)

அதிகாரம் மிக்க தரப்பினருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதை ஏற்றுக் கொண்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்க, சட்டம் நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுமாயின் இளைஞர் கிளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

ஊழல், மோசடிகளை இல்லாதொழிக்க சட்ட, அரசமைப்பு, தொழில்நுட்ப ரீதியான பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற கடந்தகால ஊழல், மோசடிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விடயத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஊழல், மோசடிகளை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பதே தற்போதுள்ள முக்கிய விடயமாக உள்ளது. கடந்த காலத்தில் பாரிய தொழில்நுட்ப மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இவை நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

ஊழல், மோசடிகளைத் தடுத்து நிறுத்தவும், அதில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கும்தான் மக்கள் கடந்த ஜனாதிபதி மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் ஆணை வழங்கினர்.

ஆனால் இங்கு அதிகாரம் மிக்கத் தரப்பினருக்கு எதிராக சட்டம் செயற்படுவதில்லை.

மக்கள் சட்டத்தின்மீது நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின், தராதரம் பார்க்காது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சட்டத்தை நிலைநிறுத்த ஜனாதிபதியும், பிரதமரும் குறுகிய காலத்துக்குள் நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

சட்டம் நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதே நாட்டிலுள்ள பிரச்சினையாகும். இது இளைஞர் கிளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

அவன்கார்ட் விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படவேண்டும். அதுமட்டுமல்ல, ஊழல், மோசடிகளை இல்லாதொழிக்க சட்டம், அரசமைப்பு, தொழில்நுட்ப ரீதியாக பொறிமுறை உருவாக்கப்படவேண்டும் என்றார். (எ-11)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில் நுட்பவியல் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்களிற்கான வேலை நியமனம் தொடர்பாக அவசர கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

முகாமைத்துவ கற்கை நெறியைப் பூர்த்தி செய்த அனைத்து மாணவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ)

# காடழிப்பை ஆய்வுசெய்ய குழுவொன்று நியமிப்பு

## முதலமைச்சர் தெரிவித்தார்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சட்டவிரோத காடழிப்பு மற்றும் குடியேற்றம் தொடர்பில் ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இவ்விசாரணை அறிக்கை கிடைக்கும் வரையில் முல்லைத்தீவு காடழிப்பு தொடர்பிலான பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் 37ஆவது அமர்வு நேற்றையதினம் கைதடியிலமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது உறுப்பினர் து.ரவிகரனால் மேற்படி சட்டவிரோத காடழிப்பினை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது. இதன் போதே ரவிகரனின் பிரேரணை அடுத்த அமர்விற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட குமரபுரம் மற்றும் குமுளமுனை கிராம அலுவலர் பிரிவில் ஐந்நூறு ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டு வருகின்றமை, அதிகாரிகளால் ஏன் கண்டுகொள்ளப்படவில்லை? தண்ணிமுறிப்பு குளத்தின் களப்புக்கு அண்மையான பகுதிகளில் கூட திட்டமிட்டு காடுகள் அழிக்கப்பட்டு அரசியல் செல்வாக்குகளின் அடிப்படையில் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றது.

ஒரு தலைப்பட்சமான இந்த நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என காணி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சரினை கோருகின்றேன் என ரவிகரன் தனது பிரேரணையை முன்மொழிந்தார். இப்பிரேரணை வழிமொழியப்பட்டதனை அடுத்து இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து, அங்கு அவ்வாறு சட்டவிரோத காடழிப்பொன்றும் நடைபெறவில்லை என்றும் கருத்துக்களை முன்வைத்தனர்.

இப்பிரேரணை தொடர்பான விவாதம் தமிழ் முஸ்லிம் என்று இனம் சார்ந்து செல்லத்தொடங்க இடையில் குறுக்கிட்ட வடக்கு மாகாண முதலமைச்சர், மேற்படி காடழிப்பு தொடர்பாக காணி திணைக்களத்தில் உள்ள அதிகாரிகள் சிலரிடம் ஆய்வொன்றினை மேற்கொள்ளுமாறு பணித்திருப்பதாகவும், இதன் முடிவுகள் தனக்கு அறிக்கையாக கிடைக்கப்பெறும் எனவும் கூறி,

இப்பிரேரணையை இந்த அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அடுத்த அமர்விற்கு எடுத்துக்கொள்வது நல்லதாகும், உண்மைகளை அறியாமல் விவாதித்தால் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வற்ற நிலை ஏற்படாலம் எனவும் சுட்டிக்காட்டினார்.

முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உறுப்பினர்கள் அடுத்த அமர்விற்கு பிரேரணையை ஒத்திவைப்பதற்கு சம்மதித்தனர். இதனையடுத்து குறித்த பிரேரணை அடுத்த அமர்விற்கு ஒத்தி வைக்கப்பட்டது. (எ-4)

**கண்ணீர் அஞ்சலி**

திரு. இ.பரராஜசேகரம்

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் முன்னாள் மாவட்ட உத்தியோகத்தருமான

திரு.இ.பரராஜசேகரம்

அவர்கள் திடீர் இயற்கையெய்தியதையிட்டு அதிர்ச்சியும் துயரும் அடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். 08-11-2015 ஞாயிற்றுக்கிழமை கைதடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள இறுதி கிரியைகளில் எமது சங்க அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
கச்சேரி,
யாழ்ப்பாணம். (2251)

# லலித் வீரதுங்க, அனுஷவை ஏன் கைது செய்யவில்லை?

## காரணம் கூறிய அதிகாரி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட ஆகியோரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமை ஏன் என்பது குறித்து நேற்று நிதி குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் தகவலளித்தார்.

அவர்களை கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ள போதும் தனக்கு வேறோரு கடமை வழங்கப்பட்டிருந்ததால் அதனை செய்யவில்லை என, அவர் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த செப்டெம்பர் மாதம 16 ஆம் திகதி லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்டவை கைது செய்யுமாறு தனக்கு சட்டமா அதிபர் பணிபுரை விடுத்ததாக, நிதி குற்ற விசாரணைப் பிரிவின் இலக்கம் 2இன் பொறுப்பதிகாரி சாதின் தெரிவித்தார்.

எனினும் அதற்கு மறுதினம் தங்காலை நீதிமன்றத்தில் பிறிதொரு வழக்குக்காக சென்றமையால் அந்த பணிப்புரையை செயற்படுத்த முடியவில்லை என குறிப்பிட்ட அவர், பின்னர் செப்டெம்பர் 18 ஆம் திகதி அவர்களைக் கைதுசெய்யச் சென்ற போது, இருவருக்கும் எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக தெரியவந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே அவர்களை கைது செய்ய முடியவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இந்த செயற்பாடுகளால் நீதிமன்றத்துக்கு அபகீர்த்தி ஏற்பட்டிருந்தால் மன்னிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கும் அரசிற்கும் எந்தத் தொடர்புமில்லை

## அமைச்சர் மனோகணேசன் மறுப்பு

(கொழும்பு)



**பலகலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு அரசுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் அரசு மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதாக எமது செய்தி சேவைக்கு நேற்று வழங்கிய விசேட செவ்வியின் போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மாணவர்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது ஆட்சியின் கீழ் கடமையாற்றி வருகின்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு எமது செயற்பாடு சரியாக தெரியவில்லை.

இன்னும் முன்னைய அரசாங்கத்தின் பாணியில் தான் செயற்பட்டு வருவதாகத்தான் நான் நினைக்கிறேன் என்றார் அமைச்சர்.

நாங்கள் ஆட்சியமைத்து 2 மாதங்கள் தான். எனவே அரசாங்கம் மீது குற்றம் சுமத்துவது தவறு. முன்னைய அரசாங்க ஆதரவாளரகள் இந்த சம்பவத்தோடு தொடர்புபட்டிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# இலங்கை தமிழ் அகதிகள் நாடு திரும்ப இந்திய அரசு உதவி செய்ய வேண்டும்

இலங்கை தமிழ் அகதிகள் நாடு திரும்பவும் அவர்கள் அங்கு குடியேறவும் தேவையான உதவிகளை இந்திய அரசு வழங்க வேண்டும் என்று ஈழ அகதிகள் மறுவாழ்வு மைய பொருளாளர் எஸ்.சி.சந்திரஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் மற்றும் பொது கொள்கைகளுக்கான 'தி இந்து' மையம் சார்பில் இந்தியாவில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளின் எதிர்காலம் குறித்த கருத்தரங்கம், சென்னை மியூசிக் அகடமியில் நேற்று முன்தினம் நடந்தது.

இந்நிகழ்வில் சந்திர ஹாசன் பேசும்போது, "கடந்த 35 ஆண்டுகளாக இலங்கை அகதிகள் மீது இந்திய அரசும், தமிழக அரசும் மிகவும் பெருந்தன்மையுடனும் கரிசனத்துடனும் நடந்து கொண்டுள்ளன. எங்களுக்கு அளித்த ஆதரவுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம். தற்போது, இலங்கையில் போர் முடிந்து விட்டதால், அடுத்தகட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. இதில் பெரும்பான்மையான மக்கள் இலங்கை திரும்பி தம் உரிமைகளை பெற வேண்டும் என்று விரும்புகின்றனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்திய அரசும், தமிழக அரசும் செய்ய வேண்டும். யாரையும் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. இந்தியாவில் இருப்பதும் இலங்கை திரும்புவதும் அவரவரின் தனிப்பட்ட முடிவு. இதற்கு 'தி இந்து' நாளிதழ் எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்" என தெரிவித்தார்.(இ-7-10)

# மகிந்தவை விமர்சித்தவருக்கு நட்டஈடு வழங்குமாறு உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விமர்சிக்கும் பெனரை காட்சிப்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு ஒருவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமை மூலம் பொலிஸார் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக நேற்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அனில் குணரத்ன தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

தங்காலை பகுதி மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவரான டெனிங்டர் குணசேகர என்பவராலேயே இநத மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர் பில் விமர்சிக்கும் பெனர் ஒன்றை தன் வீட்டு முன் காட்சிப் படுத்தியிருந்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தங்காலை பொலிஸார் வந்து அந்த பெனரைக் கிழித்ததோடு தன்னையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகவும் இதன்மூலம் தனது கருத்து வெளியிடும் சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும் அவர் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

மனு தொடர்பில் தற்போது தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், தங்காலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அவரது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி அவருக்கு 20 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் உயர் நீதிமன்றம உத்தரவிட்டுள்ளது.(இ-7-10)

# கசினோக்களை ஊக்குவிக்க மைத்திரி அரசாங்கம் முயற்சி

## விமல் குற்றச்சாட்டு



நாட்டில் கசினோக்கள் வேண்டாமெனக்கூறிய நல்லாட்சி அரசாங்கத்தின் ஆதரவாளர்கள், ஆபாசப்படங்களில் நடிக்கும் நடிகையை நாட்டுக்கு அழைத்து வந்து, கசினோக்களை ஊக்குவிக்கத் திட்டமிடுகிறார்களா என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

"எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கைக்கு வருகை தரத் திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்பிலுள்ள கசினோவொன்றில் இடம்பெறவுள்ள இசை நிகழ்ச்சியொன்றிலும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் குறித்த நடிகை அறிவித்துள்ளார்.

இலங்கையில் சூதாட்ட வலையமைப்பைக் கொண்டுள்ள வர்த்தகரொருவரின் அனுசரணையுடனேயே அவர் இங்கு வருகை தரவுள்ளார்" எனவும் விமல் தெரிவித்தார்.

குறித்த நடிகை நாட்டுக்கு வருவதற்கு அத்துரலியே ரத்ன தேரர், எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என தெரிவித்துள்ள விமல், கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது கசினோக்களை எதிர்த்தவர்களில் அவரும் ஒருவர் எனத் தெரிவித்தார்.

பாலியல் தொழிலாளர்களுக்கான சங்கம் எனத் தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளும் அமைப்பொன்று, பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியிருந்தது. இப்படியே சென்றால், நாடு எந்த நிலைமைக்குச் செல்லும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாதுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மகிந்த ராஜபக்ஷவை இழிவுபடுத்தக்கூடாது

## பந்துல குணவர்த்தன அட்வைஸ்

நாட்டைக் காப்பாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இழிவுபடுத்த வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன் தெரிவிததுள்ளார்.

நாடாளுமன்ற விவாதங்களில் நேற்று முன்தினம் பங்கேற்று பேசிய போது அவர் இதனைத தெரிவித்தார்.

அனைவருக்கும் நாடு தொடர்பில் பொறுப்பு காணப்படுகின்றது.

நாட்டை பாதுகாத்த மகிந்த ராஜபக்ஷவை தொடர்ச்சியாக தாக்கக் கூடாது.

அனைவருக்கும் கௌரவமான முறையில் மரணிக்க இடமளிக்க வேண்டும்.

கௌதம புத்தரின் உடன் பிறப்புக்கள் போன்று சிலர் நாடாளுமன்றில் கருத்து வெளியிடுகின்றனர். நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு என்று ஒன்று உள்ளது.

பிரதி சபாநாயகரே, சபாநாயகருடன் பேசி நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 பேரின் சுய கௌரவத்தையும் பாதுகாக்க திட்டமொன்றை வகுக்கும்பொறுப்பு உங்களுக்கு உண்டு.

நான் அமைச்சராக கடமையாற்றிய காலங்களில் ஐந்து சதமேனும் திருடவில்லை என்பதனை மிகுந்த பொறுப்புடன் கூறுகின்றேன் என பந்துல குணவர்ததன தெரிவித்துள்ளார். (இ-7-10)

## 7 படையினர் பலி!

ஐக்கிய நாடுகள் சபையின அமைதிகாப்பு பணிகளுககாக சென்ற இலங்கை படையினரில இதுவரை ஏழு பேர் உயிர்நத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பின் சிறு வர் நல அதிகாரி கே.ரவீந்திரன் தெரிவித்தார்.

நேற்று காலை மட்டக்களப்பு டேபா மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தினவிழாவில் கலந்து கொணடு பேசும்போதே இதனை தெரிவித்தார். ஐ.நா.அமைதி காப்பு சமா தான பணிகளில் 1200 இலங்கை படையினர் ஈடுபட்டுள்ளனர், தற்போது ஹெயிட்டி, தென்சூடான், மத்திய ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் அமைதிகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும்அவர்மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## அயல் நாடுகளில் அத்துமீறல்களை தடுக்க இந்திய மீனவர்களுக்கு நிதியொதுக்கீடு

தமிழக மீனவர்களின் பழைய இழுவைப்படகுகளுக்கு பதிலாக புதிய டூனா படகுகளை கொள்வனவு செய்ய இந்திய மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளது.

இதன்மூலம் தமிழக மீனவர்கள் இலங்கை உட்பட்ட நாடுகளின் கடல்பகுதிகளுக்கு சென்று இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடியில் ஈடுபடுவது தடுக்கப்படும் என்று இந்திய விவசாயத்துறை அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் சுமார் 3000 இழுவைப்படகுகள் உள்ளன.


இவற்றைக் கொண்டு மீனவர்கள் அயல் நாடுகளில் மீன்பிடியில் ஈடுபடுவதால் அந்த நாடுகளின் மீன் உட்பட்ட கடல்வளங்கள் அழிவதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையிலேயே மத்திய அரசாங்கம் புதிய நிதியொதுக்கீடை செய்யவுள்ளது.

இந்தநிலையில் புதிய படகுகளை கொள்வனவு செய்ய முழுமையாக 950 கோடி ரூபாய்களை தமிழக அரசாங்கம் கோரிய போதும் அரைவாசி பணத்தை படகு சொந்தக்காரர்களும் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கம் 380 கோடி ரூபாய்களை ஒதுக்கீடு செய்ய முன் வந்துள்ளது.

இதேவேளை புதிய டூனா படகு ஒன்றின்விலை60இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# தென்னாபிரிக்கா அபார பந்துவீச்சு 201 ஓட்டங்களில் சுருண்டது இந்தியா



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சில் இந்தியா 201 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்த டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் மொகாலியில் நேற்று தொடங்கியது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி, முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். அதன்படி, இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதில் தொடக்க வீரர்களாக தவான், முரளி விஜய் களமிறங்கினர். தவான் டக்-அவுட்டாக வெளியேறினார்.

அடுத்து வந்த புஜாரா சிறிது நேரம் நிலைத்து நின்றார். அவர் 31 ஓட்டங்கள் குவித்த நிலையில் வெளியேறினார்.

அணித்தலைவர் ஹோலி ஒரு ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின்னர் களமிறங்கிய ரஹானேவும் (15) நிலைக்கவில்லை.

அடுத்து வந்த சகா டக்-அவுட்டாக நடையை கட்டினார். சிறப்பாக ஆடி வந்த முரளி விஜய் (75) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார்.

மிஸ்ரா (6) நிலைக்கவில்லை. பின்னர் அஸ்வின், ஜடேஜா (38) சற்று நிலைத்து நின்று ஆடினர். உமேஷ் (5), ஆரோன் (0) தாகிர் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இதனால் இந்தியா 68 ஓவர்களில் 201 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அனைத்து விக்கெட்டையும் இழந்தது. அஸ்வின் (20) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென்னாபிரிக்க அணி சார்பில், எல்கர் 4, பிளாண்டர், தாகிர் தலா 2, ரபாடா, ஹார்மர் தலா ஒரு விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளனர்.

இதனையடுத்து தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்சை விளையாடியது. நேற்றைய முதல் நாள் முடிவில் தென்னாபிரிக்கா அணி 2 விக்கெட்டினை இழந்து 28 ஓட்டங்களை எடுத்துள்ளது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# வோர்னர், கவாஜா சதம் வலுவான நிலையில் ஆஸி



வேர்னர், கவாஜா ஆகியோரின் அசத்தல் சதம் மூலம் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டின் முதல் நாள் முடிவில் அவுஸ்ரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது.

அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் பிரிஸ்பேனில் நேற்று தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி வோர்னரும், ஜோ பர்ன்ஸும் களம் இறங்கினார்கள். இருவரும் தொடக்கம் முதலே நியூசிலாந்தின் பந்து வீச்சை விளாசித் தள்ளினார்கள்.

டிரென்ட் போல்ட், டிம் சவுத்தி ஆகியோரால் இருவரையும் ஒன்றும் செய்ய இயலவில்லை. குறிப்பாக வோர்னர் அதிரடியாக விளையாடினார்.

இதனால் அவுஸ்தி ரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந் தது.


சிறப்பாக விளையாடிய இருவரும் அரை சதம் கடந்தனர். ஓட்ட எண்ணிக்கை 161 ரன்னாக இருக்கும்போது அவுஸ்திரேலியா தனது முதல் விக்கெட்டை இழந்தது. பர்ன்ஸ் 71 ரன்கள் எடுத்த நிலையில் சவுத்தி பந்தில் ஆட்டமிழந் தார். அடுத்து கவாஜா களம் இறங்கினார்.

இந்த ஜோடியும் சிறப்பாக விளையாடியது. சதம் கடந்து தொடர்ந்து விளாசிய வோர்னர் 163 ரன்கள் குவித்து நீசம் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அப்போது அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்பிற்கு 311 ரன்கள் எடுத்திருந்தது. 3-வது விக்கெட்டுக்கு கவாஜாவுடன் அணித்தலைவர் ஸ்டீபன் ஸ்மித் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

கவாஜா சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவுஸ்திரேலியா அணி 88 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 389 ரன்கள் குவித்திருக்கும்போது முதல் நாள் ஆட்டம் முடிவடைந்தது. கவாஜா 102 ரன்களுடனும், ஸ்மித் 41 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

ஒரே நாளில் 389 ரன்கள் குவித்துள்ள அவுஸ்திரேலியா 2 விக்கெட்டை மட்டுமே இழந்துள்ளது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.



# இறுதி டெஸ்டிலும் இங்கிலாந்தை வீழ்த்தி தொடரை வென்றது பாகிஸ்தான்



ஷார்ஜாவில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதியது. இதில் பாகிஸ்தான் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் கடைசி டெஸ்ட் போட்டி ஷார்ஜாவில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் இன்னிங்சில் மிஸ்பாவின் (71) அரைசதத்தால் 234 ஓட்டங்கள் எடுத்த நிலையில், அனைத்து விக்கெட்டையும் இழந்தது. இங்கிலாந்து சார்பில், அண்டர்சன் 4 விக்கெட்டை வீழ்த்தினார்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 306 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டையும் இழந்தது. டெய்லர் (76) அரைசதம் எடுத்தார். பாகிஸ்தான் சார்பில், மாலிக் 4, யாசிர் ஷா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து பாகிஸ்தான் 72 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் ஹபீஸின் (151) அபார சதத்தால் 2-வது இன்னிங்சில் பாகிஸ்தான் 355 ஓட்டங்கள் எடுத்தது.

இதனால் இங்கிலாந்துக்கு 284 என சவாலான ஓட்டங்கள் வெற்றி இலக்கு கொடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 4-வது நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 2 விக்கெட்டுக்கு 46 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அணித்தலைவர் குக் (17), ஜோ ரூட் (6) ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். நேற்று கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது.

ரூட் நேற்றைய 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த டெய்லர் 2 ஓட்டங்களிலும், பேர்ஸ்டோவ், படேல் டக் அவுட் ஆனார்கள்.

இதனால் இங்கிலாந்து அணி 59 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 6 விக்கெட்டை இழந்து தவித்தது.

பின்னர் களமிறங்கிய ரஷித் (22) பிராட் (20) ஓரளவு ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். குக் (63) அரைசதம் எடுத்தார்.

கடைசியாக வந்த ஸ்டோக்ஸ் 12 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 60.3 ஓவரில் 156 ஓட்டங்கள் எடுத்து சுருண்டது.

இதனால் பாகிஸ்தான் 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் பாகிஸ்தான் மூன்று பேட்டிகள் கொண்ட தொடரை 2-0 எனக் கைப்பற்றியது.

பாகிஸ்தான் தரப்பில், சுழற்பந்து வீச்சாளர்கள் யாசீர் ஷா 4, சோயிப் மாலிக் 3 விக்கெட் வீழ்த்தினார்கள். ஆட்டநாயகனாக ஹபீசும், தொடர் ஆட்டநாயகனாக யாசிரஷாவும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# பிள்ளையானிடம் துப்பாக்கி குறித்து தீவிர விசாரணை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மற்றும், வாகனம் என்பன மறைத்து வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாக பிள்ளையானிடம் விசாரணை செய்து வருவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும், சிவநேசதுரை சந்திரகாந்தன், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சின் மூன்று மாத தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீதான தடுப்புக்காவல் உத்தரவு 2016ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் நாள் வரை செல்லுபடியாகும்.

இந்த நிலையில், பிள்ளையான் நேற்று முன்தினம் மாதாந்த பரிசோதனைக்காக கொழும்பு பிரதம நீதவான் கிகான் பிலபிட்டிய முன்னிலையில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நிறுத்தப்பட்டார்.

அப்போது, சந்தேக நபரான பிள்ளையான், விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க முயன்ற குற்றச்சாட்டில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அத்துடன், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மற்றும் வாகனம் என்பன மறைத்து வைக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாக, பிள்ளையானிடம் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, பிள்ளையானை மாதாந்த பரிசோதனைக்காக டிசெம்பர் 10ஆம் திகதி முன்னிறுத்தும்படி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க முயன்றதாக, பிள்ளையான் மீது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு, இந்த வழக்கை திசை திருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-7-10)


# வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## நெல்லியடி நவீன சந்தை புதிய கட்டடத் தொகுதியிலுள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2015

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு மார்கழி மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

1.கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 20/11/2015.

2.கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி:- 23/11/2015. நண்பகல் 12.00மணி வரை

3.கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 23/11/2015.பி.ப.2.00 மணி வரை.

4.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.

5.கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6.எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

7.விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒருமுறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும். இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.

8.அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இக் கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.

9.ஏற்றுக்கொள்ளப்படும் சித்திரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 11 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

### கேள்வி அட்டவணை

| தொ.இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| Ground Floor | | | | | |
| 3 | GF3 | 1,111,200.00 | 11,200.00 | 1,000.00 | 4250.00 |
| 9 | GF9 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 10 | GF10 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 13 | GF13 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| 14 | GF14 | 900,000.00 | 9,000.00 | 1,000.00 | 3750.00 |
| UPPER FLOOR | | | | | |
| 15 | UF15 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 16 | UF16 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 17 | UF17 | 1,020,000.00 | 10,200.00 | 1,000.00 | 4250.00 |
| 18 | UF18 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 19 | UF19 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 20 | UF20 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 21 | UF21 | 780,000.00 | 7,800.00 | 1,000.00 | 3250.00 |
| 22 | UF22 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 23 | UF23 | 480,000.00 | 4,800.00 | 1,000.00 | 2000.00 |
| 24 | UF24 | 480,000.00 | 4,800.00 | 1,000.00 | 2000.00 |
| 26 | UF26 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |
| 27 | UF27 | 720,000.00 | 7,200.00 | 1,000.00 | 3000.00 |

10.மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.

11.கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக , வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.

12.குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.கனகதுரை**
**செயலாளர்**
**வடமராட்சி**
**தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**
**05/11/2015.**

(சி-2627)


# ராசி பலன்

06.11.2015
(ஐப்பசி 20, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59மணிக்கு
தசமி பிற்பகல் 1.56 மணிவரை
பூரம் பின்னிரவு 4.36 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம் | | |
| | | | குரு, சந் |
| | சனி | சூரி, புத | ராகு, செவ் சுக் |

**மேடம்:** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** தனவரவில் இருந்த தடைகள் அகலும்,பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வழிபாட்டால் முன்னேற்றமுண்டு, சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர ஒற்றுமை மேலோங்கும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,தொலை தூரத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம்,வருமானம் திருப்தி தரும்,கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், திடீர் பயணங்களும் கைகூடும் வாய்ப்புண்டு,கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள், சுப நிகழ்வுகளுக்கான செலவுகள் ஏற்படலாம்,ஊர் மாற்றம்,இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**துலாம்:** திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள்,அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்,குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்,போசன சுகமுண்டு.

**தனுசு:** தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்,மருத்துவ செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும்,எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்:** அம்பிகையை வழிபட்டு அமைதி காண வேண்டிய நாள்,தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது ,உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கும்பம்:** புதிய பொருட்களை வாங்கி மகிழும் நாள்,குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்,அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்,பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள்.

# 19 இந்திய மீனவர்களுக்கும் 19 ஆம் திகதி வரை மறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட புதுக்கோட்டை மற்றும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 19 இந்திய மீனவர்களையும் தொடர்ந்து எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஆர்.சபேசன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி இரவு காரைநகர் வடக்கு கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 6 இந்திய மீனவர்களையும், கடந்த ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறயி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 13 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் அதிகாரிகளால் அந்தந்த திகதிகளில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த வகையில் கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட புதுக்கோட்டை ஜெக தாப்பட்டிணத்தை சேர்ந்த 6 இந்திய மீனவர்களையும் 4 ஆவது முறையாக எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறும் கடந்த ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இராமேஸ்வரத்தை சேர்ந்த 13 இந்திய மீனவர்களையும் 2 ஆவது முறையாக எதிர்வரும் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-9)




# இந்திய வீட்டுத்திட்ட பணிகளை விரைவுபடுத்துமாறு வலியுறுத்து

## யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்துக்கான இந்திய வீட்டுத்திட்ட பணிகளை விரைவாக நிறைவுபடுத்துமாறு வீட்டுத்திட்ட பணிகளை முன்னெடுக்கும் முகவர் நிறுவனங்களிடம் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் வலியுறுத்தியுள்ளார்.**





இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை முன்னெடுக்கும் முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கான வீட்டுத்திட்டத்தின் முன்னோடிச் செயற்றிட்டம் மற்றும் இரண்டாம் கட்டச் செயற்றிட்டம் உள்ளிட்ட இரண்டிற்குமாக ஒதுக்கப்பட்ட 41 ஆயிரத்து 950 வீடுகளில் 35 ஆயிரத்து 500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மிகுதியாகவுள்ள 6ஆயிரத்து 450 வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் மேற்படி கலந்துரையாடலில் இந்திய வீட்டுத்திட்ட பணிகளை மீளாய்வு செய்ததுடன் மேற்படி செயற்றிட்டத்தினை விரைவுபடுத்துவது பற்றியும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கொழும்புக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரி, இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனங்களான ஐ.எப்.ஆர்.சி/ எஸ்.எல்.ஆர்.சி.யூ என் ஹபிரற்என்.எச்.டி.எ ஆகியவற்றின் பொறியியலாளர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட 100 பேர் கலந்து கொண்டனர். (இ-9)

# குடும்பப்பெண் கடத்தல் விவகாரம் குறித்து ஏழு சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல்

(கரணவாய்)

வடமராட்சி இமையாணன் பகுதியில் திருமணத்திற்காக வெளிநாட்டில் இருநது வந்து தங்கியிருந்த பெண்ணைக் கடத்திய சம்பவம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 7 சந்தேக நபர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதவான் மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம 14 ஆம் திகதி அன்று குறித்த பெண் கடத்தல் குழு ஒன்றினால் கடத்தப்பட்டிருந்தார்.

இதனையடுத்து வரணி மற்றும் கொற்றாவத்தையைச் சேர்ந்த 7 சந்தேக நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் மேற்படி வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்றுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்களுக்கான பிணை மனு தொடர்பாக சட்டத்தரணி சிறீகாந்த சமர்ப்பித்திருந்தும் அப் பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

குறித்த வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை ஒதுதி வைக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

# தேசியமட்ட சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் தேசிய மட்ட சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியில் 2015ஆம் ஆண்டில் தேசியமட்ட சாதனையாளர்களாக திகழ்ந்த விளையாட்டுத்துறையில் 6 மாணவர்களும் தமிழ்மொழித் துறையில் 6 மாணவர்களும் ஆங்கிலத்துறையில் 10 மாணவர்களும் இதன்போது கௌரவிக்கப்படவுள்ளனர்.

இம்மாணவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளனர் என கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் அறிவித்துள்ளார். (இ-5)

# வரவு-செலவுத்திட்ட உரை வீரசிங்கம் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத்தில் நிதி அமைச்சரினால் நிகழ்த்தப்படவுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட உரை முதன் முறையாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலக ஆணையாளர் எஸ். சர்வேஸ்வரன் தெரிவிததுள்ளார்.

நேரடி ஒளிபரப்பினை தொடர்ந்து வரவு செலவு திட்டம் தொடர்பான கருத்தரங்கு உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது.

முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு தங்கள‌து சந்தேகங்களுக்கு விடைகளை பெற்று பயன்பெற வேணடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பிரிவுபசார விழா

யாழ்.தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முன்னாள் அதிபர் நா. தனபாலசிங்கத்தின் பிரிவுபசார விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் ப.சுதானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக விழா நாயகனான யாழ். வட்டு இந்துக் கல்லூரி அதிபர் நா. தனபாலசிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை யாழ். தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை உப அதிபர் எஸ்.கணேசகுமார் நிகழ்த்தவுள்ளதுடன் தலைமையுரையினை அதிபர் ப.சுதானந்தராஜா நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரைகளை தாவடி ஸ்ரீ அம்பலவாணவேத விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.சிவசங்கரக்குருக்கள். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன், சத்திய சேவா நிலைய வட பிராந்தியத் தலைவர் இ.சரவணபவன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

# பனம் விதை நடும்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களினால் 3இலட்சம் பனம்விதை நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் 2015ஆம் ஆண்டுக்கான பனம்விதை நடுகை திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையானது பிரதேசசெயலகங்கள்,கிராம அலுவலர் பிரிவுடன் இணைந்து 6இலட்சம் பனம்விதை நடுகை திட்டத்தை செயற்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் அத் திட்டத்திற்கும்மேலதிகமாகமாகாண சபையின் மரம் நடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னைவள கூட்டுறவு சங்கங்களின் ஊடாக 3இலட்சம் பனம்விதை நடுகை செய்யும் திட்டம் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு பனை அபிவிருத்திச் சபையினால் 1.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-9)

# மத்திய கல்லூரியில் மரம் நாட்டும் விழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மரம் நாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணம்பிரதேச செயலர் திரு மதி. சுகுணரதி தெய்வேந்திரம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக திருமதி. வே.பாலேந்திரா கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# கத்தி முனையில் கொள்ளை!

## சங்கானையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கத்திமுனையில் தம்பதியர் அச்சுறுத்தப்பட்டு 7பவுண் நகைகளும் 10ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் சங்கானை 7ஆம் கட்டைமுருகமூர்த்தி கோவிலடிக்கு அருகாமையில் உள்ள வீடுஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்துமேலும்தெரியவருவதாவது,

சம்பவ தினமன்று குறித்த வீட்டுக்கதவு உடைத்து உள்நுழைந்தகொள்ளையர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தம்பதியினரை கழுத்தில் கத்தி வைத்து அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டனர்.

கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மனைவி கழுத்தில் இருந்த தாலிச்சங்கிலியை கழற்றுமாறு மிரட்டியுள்ளனர்.

கணவனின்உயிரைக்காப்பாற்றுவதற்காக மனைவி தன் கழுத்தில் இருந்த தாலிச் சங்கிலியை கழற்றிக் கொடுத்துள்ளார்.அத்துடன் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த காப்பு, மோதிரம் என்பவற்றுடன் 7 பவுண் நகைகளும் 10ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் அத்தம்பதியரால் பதிவு செய்யப்பட்டது. இதனையடுத்து பொலிஸார் கொள்ளையர்களின் கைரேகைகளை பதிவு செய்ய சென்றனர்.

இதனையடுத்து இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.(இ-5)

# தரமுயர்த்தப்பட்டது யாழ்.மத்திய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி தேசிய ரீதியான விளையாட்டுப் பாடசாலைக்காக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதில் கல்வி கற்பதற்காக வட மாகாண ரீதியாக 2016 ஆம் ஆண்டு தரம்-08 இல் கல்வி கற்கும் வடமாகாண பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதில் 20 மாணவர்கள் உடற்தகைமைப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுத்து பாடசாலை மாணவர் விடுதியில் இருந்து இலவசமாக கல்வி கற்பதற்கான புலமைப்பரிசினைப் பெறுகின்றனர்.

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தமது சுய விபரத்துடனும் தற்போதைய பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடனும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 021 222 2184 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# ஆஸிக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தால் இடமில்லை!

## உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி உறுதி

**சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் எவரும் நாட்டில் குடியேற்றப்படமாட்டார்கள் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ரொபின் மூடி கிழக்கு மாகாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தெரிவித்துள்ளார்.**

2013 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவு அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் இலங்கையிலிருந்து படகு மூலம் சட்டவிரோதமாக புகலிடம் கோரும் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாகவும் சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோதப் படகுப் பயணம் குறித்த அவுஸ்திரேலியாவின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லிணக்க முனைப்புக்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## அவன்கார்ட், தாஜுடீன் வழக்குகள் குறித்து உத்தரவு பிறப்பித்த நீதவான் இடமாற்றம்

அவன்கார்ட் மற்றும் தாஜுடீன் வழக்குகள் குறித்து உத்தரவு பிறப்பித்த நீதவான் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்குகள் தொடர்பில் உத்தரவுகளை பிறப்பித்த கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸிற்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிசேவை ஆணைக்குழுவினால் இந்த உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றின் 3ம் இலக்க நீதிமன்றில் நீதவானாக கடமையாற்றிய மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மாத்தறை மாவட்ட நீதிமன்ற நீதவானாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்டிருந்த பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு நீதவான் பிறப்பித்த உத்தரவிற்கு அமைய பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொலைத்தொடர்பு ஆணைக்குழுவில் இடம்பெற்ற 600 மில்லியன் ரூபா மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷபெல்பிட்ட மற்றும் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரை நீதிமன்றில் ஏன் நிறுத்தவில்லை என விளக்கம் அளிக்குமாறு நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு நீதவான் நிசாந்த உத்தர விட்டிருந்தார். அதன் அடிப்படையில் நேற்று நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி நீதிமன்றில் முன்னிலையானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# கலைஞர்களை பதிவு செய்வதற்கு கலாசார திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்களம் கலை கலாசார நடவடிக்கைகளை ஊக்குவித்து மேம்படுத்து தலை தனது செயற்றிட்டங்களில் ஒன்றாக மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களின் கலை கலாசார செயற்பாடுகளை மேலும் ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கிலும் அதனை ஒழுங்கு நெறிப்படுத்தும் முகமாக இலங்கையிலுள்ள கலை கலாசார இலக்கிய மன்றங்களையும் கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் முறைப்படி பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தில் ஏற்கனவே பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத கலை கலா சார இலக்கிய மன்றங்களை யும கலைஞர்களையும் 31.12. 2015 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

மன்றங்கள், கலைஞர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை திணைக்களத்தில் அல்லது திணைக்கள இணையத்தில் தரவிறக்கம் செய்து (www. hindudept.gov.lk) பெற்றுக் கொள்ள முடியும். பதிவு கோரிக்கை கொண்ட விண்ணப்பப்படிவங்களை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 241, 1/1, காலி வீதி, கொழும்பு -04 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ)


### யாரிடம் பேசுவது?

யார் என்னை புரிந்து கொள்வார்? நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்? நான் என்ன தவறு செய்தேன்? என்னால் ஒன்றுமே முடியாது நான் என்ன செய்வது?

எம்முடன் பேசுங்கள்

கை கொடுக்கும் நண்பர்கள்

104, 4, ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை

☆ மதசார்பற்றது ☆ ரகசியம் பேணப்படும்

021 222 8117, 077 900 8776

Sponsored by enlightenment circle an arm of saiva munnetta sangam UK

(2116)

### வாடகைக்கு

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554 A, 554 B, 554 C எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்

தொடர்புகளுக்கு :- நா.தயாளன்

இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(2225)






### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:18செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/5165 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 42செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/தனியார்<br>தொ.இ: G/2788 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 35செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5166 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 19<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2797 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 37செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5167 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 44செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:B.COM<br>தொ.இ: G/2812 |
| பிறப்பு: 1980RC<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/5168 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 44<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSC<br>தொ.இ: G/2839 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## ஓய்வூதியக் காப்புறுதி திட்டத்தில் இணைந்த


# 12 விவசாயிகளுக்கான காசோலை, ஓய்வூதிய அனுமதி கடிதம் வழங்கல்

(மல்லாவி)

மத்திய விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் விவசாயிகள் ஓய்வூதிய காப்புறுதி திட்டத்தில் இணைந்திருந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 12 விவசாயிகளுக்கு ஒரு வருடத்திற்குரிய 2 இலட்சத்து 66 ஆயிரத்து 790 ரூபா பகிர்ந்து வழங்கப்பட்டதுடன் ஓய்வூதியமாக மாதாந்தம் ஆயிரத்து 100 ரூபா பெறுவதற்கான அனுமதிக்கடிதமும் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் உதவிக் கல்விப்பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் , சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர். விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் ஓய்வூதியக்காரர்களுக்கான காசோலைகளையும் வழங்கி வைத்தனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமுழமுனை , முல்லைத்தீவு , யோகபுரம். மல்லாவி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தலா ஒரு நபர் வீதமும் விசுவமடு 3 நபர் , முள்ளியவளை 4 நபர் உடையார்கட்டு 2 நபர் மொத்தம் 12 பேருக்கு தலா 20 ஆயிரத்து 900 ரூபாவிற்கான காசோலைகளையும் மற்றும் மாதாந்தம் ஆயிரத்து 100 ரூபா ஓய்வூதியமாகப் பெறுவதற்கான கடிதமும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. (2-15)



யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றம் (CCIY) சர்வதேச தொழிலாளர் அமைப்பினருடன் (ILO) இணைந்து கிளிநொச்சி , முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தி வரும் பெண் முயற்சியாளர் அபிவிருத்தி மற்றும் பால்நிலை சமத்துவம் எனும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த 21 பெண் முயற்சியாளர்களுக்கான தொழில் தொடர்பான இயந்திர உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கு.விக்கினேஸ் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (IDB) அலுவலகத்தில் நடைபெற்ற போது...

இந்நிகழ்வில் வைத்து 21 பெண் முயற்சியாளர்களுக்கான பெறுமதி மிக்க தையல் இயந்திரங்கள், தானியங்கள் அரைக்கும் இயந்திரங்கள் என்பன வழங்கப்பட்டன.

### விஞ்ஞான ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு இன்று

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-11 இல் விஞ்ஞான பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான தரவட்ட செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்.

குறித்த செயல்மர்விற்கு ஆசிரியர்கள் வருகை தரும்போது 5 ஆவது பரீட்சை புள்ளி,மூன்றாம் தவணை தேர்வு புள்ளி, புள்ளி பகுப்பாய்வு, உதவிக் கருத்தரங்கு புள்ளி என்பனவற்றை தம்முடன் எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)




## 5 இலட்சம் ரூபா பெறுமதியான

# முதிரைப் பலகைகளுடன் மூன்று பேர் கைதாகினர்

### வாகனம் பறிமுதல்



வவுனியா சேமமடு நொச்சிக்குளப் பகுதியில் முதிரைப் பலகைகள் கடத்திய மூவர் கைது செய்யப்பட்டதுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய கப் ரக வாகனம் , இரு மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை வனவள பாதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த 3ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது. ஓமந்தை இறம்பைக்குளம் வனவள பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த இடத்திற்கு விரைந்த அவர்கள் குறித்த மூவரையும்கைது செய்தனர்.

இக்கடத்தலில் ஈடுபட்ட இருவர் பொலிஸார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றைய நபர் ஓமந்தை பிரதேசத்தை சேர்ந்தவ ராவர்.

இவர்களிடம் இருந்து 5இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை பலகைகள், இக்கடத்தலிற்கு பயன்படுத்திய கப் ரக வாகனம் .இரு மோட்டார் சைக்கிள் என்பவற்றை வனவள பாதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றினர். இவர்கள் நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். நீதிமன்ற நீதவான் அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (2-250)

# இளைஞர் பாராளு.தேர்தலுக்கான வேலைகள் அனைத்தும் பூர்த்தி

(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ள இளைஞர் பாராளுமன்ற தேர்தலில் 4 ஆயிரத்து 547 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம் முனவ்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர் பாராளுமன்ற தேர்தலுக்காக மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் இருந்து 14 வேட்பாளர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர்.

அவர்களில் இருவரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது. மடு மற்றும் முசலி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வேட்பாளர்களின் விண்ணப்பங்களே நிராகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது 12 பேர் மன்னார் மாவட்டத்தில் இளைஞர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதற்கான சகல நடவடிக்கைகளையும் மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 5 பேரும் ,மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு பேரும் , மடு பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வேட் பாளரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வேட்பா ளரும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று பேரும் தற்போது இளைஞர் பாராளுமன்ற தேர்த லின் வேட்பாளர்களாக மன்னார் மாவட்டத்தில் களமிங்கியுள்ளனர்.

மன்னார்மாவட்டத்தில் 6 ஆயிரத்து 401 இளைஞர் யுவதிகள் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் 4 ஆயிரத்து 547 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 1793 பேரும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 1203 பேரும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 424 பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 802 பேரும், முசலி பிரதேச செயலா ளர் பிரிவில் 505 பேரும் இவ்வாறு வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இத்தேர்தல் எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் சகல ஏற்பாடுகளும பூர்த்தியாகியுள்ளன.

இத்தேர்தலுக்கான தேர்தல் மத்திய வாக்களிப்பு நிலையங்களாக மன்னார், மாந்தை மேற்கு, மடு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு தேர்தல் அதிகாரிகளாக பிரதேச செயலாளர்கள்நியமிக்கப்படவுள்ளனர்.

தேர்தல் இறுதி முடிவுகளை உடனடியாக நாங்கள் வெளியிட தயாராக இருக்கின்றோம். கடந்த காலங்களை விட தற்போது நடைபெறவுள்ள தேர்தலானது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய தலைவர் ஜி.எஸ்.எரந்திக்க சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர என்.எம்.முனவ்பர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தின் நான்குபிரதேச செயலாளர் பிரிவுகளில் 5பேர் போட்டியிடவு ள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இவர்கள் ஐந்துபேரில் வவுனியா சார்பாக ஒருவரை தெரிவு தெரிவு செய்வதற்காக தேர்தலுக்காக வாக்களிக்க வென்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 1562 பேரும் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 767 பேரும் வவுனியா நகர் பிரதேச செயலக பிரிவில் 1600 பேரும் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 473 பேருமாக 4362பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தலானது நாளை காலை 8 மணி முதல் 3 மணிவரை வாக்கெடுப்பு நடைபெறும்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் 9 பேர் போட்டியிடவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை அதி காரி நா.குகேந்திரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் 8 பேர் போட்டியிடவுள்ளனர். இவர்கள் எட்டுப் பேரில் முல்லைத்தீவு சார்பாக ஒருவரை தெரிவு தெரிவு செய்வதற்காக 3160 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதனடிப்படையில் வெலி ஓயா பிரதேசத்தில் 215 பேரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 937 பேரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 653 பேரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில 600 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 404 பேரும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 351 பேருமாக 3160 பேர் வாக்களிக்கவுள்ளனர். (2-281)

# 507 குடும்பங்களுக்கு இலவச மின்னிணைப்பு

## துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் பிர.செயலக பிரிவுகளின் செயலர்கள் தெரிவிப்பு

(மல்லாவி)

**வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 5 ஆயிரம் குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் இலவச மின்னிணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட 507 குடும்பங்கள் பயனடையவுள்ளதாக மேற்படி 3 பிரதேச செயலக பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

அரசாங்கத்தின் வடக்கின் வசந்தத்தின் இலவச .மின்னிணைப்பு திட்டத்தின் ஊடாக இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு இலங்கை மின்சார சபையின் ஊடாக இலவசமின்னிணைப்புவழங்கப் பட்டது.

மேலும் ஒரு தொகுதி பெண் தலைமைத்துவ குடும்பங்கள், அங்கத்தவர்கள் எண்ணிக்கை கூடிய குடும்பங்கள், வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்கள் ஆகியவற்றில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் பிரதேச செயலகங்கள் ஊடாக பயனாளிகள் தெரிவு இடம்பெற்று இலங்கைமின்சாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்திடம் இலவச மின்னிணைப்பு வழங் குவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் இருந்து 86 குடும்பங்கள், மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் இருந்து 142 குடும்பங்கள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் இருந்து 279 குடும்பங்களுமாக மொத்தம் 507 குடும்பங்கள் இலவச மின்னிணைப்பை பெறவுள்ளன.

இவ் இலவச மின்னிணைப்பை ஒரு குடும்பத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்க பிரதான மின்கம்பத்தில் இருந்து ஒன்று தொடக்கம் 50 மீற்றர் தூரத்திற்குட்பட்டதாக வீடு அமையப் பெற்றிருந்தால் 20ஆயிரத்து 650 ரூபாவும் ஒன்று தொடக்கம் 150 மீற்றர் தூரத்திற்குட் பட்டதாயின் 84 ஆயிரத்து 650 ரூபாவும் அரசிற்கு செலவு ஏற்படுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (2-15)

## சட்டவிரோதமாக மரம் வெட்டிய 2 பொலிஸார் கைது

சட்டவிரோதமாக மரம் வெட்டிய சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் ஓமந்தை காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த காட்டுப் பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்த வனவள அதிகாரிகள் சட்டவிரோதமான முறையில் இருவர் மரம் வெட்டுவதை அவதானித்துள்ளனர். இதனையடுத்து அதிகாரிகள் குறித்த இருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டதில் இருவரும் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முன்தினமே வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான்இருவரையும்14நாட்கள்விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (செ-12-60)




## பேருந்தின் மிதிபலகையில் பயணித்த இளைஞன் தூக்கி வீசப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணம்

(மல்லாவி)

பேருந்தின் மிதி பலகையில் பயணித்த இளைஞன் ஒருவன் குறித்த பேருந்து வளைவு ஒன்றில் திரும்புகையில் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் மன்னார் வங்காலையைச் சேர்ந்த பத்திநாதன் ஜெனிவர் சோசை (வயது- 22) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னாரில் இருந்து வங்காலை நோக்கிப் பயணித்த பேருந்தின் மிதி பலகையில் நின்று பயணித்த இளைஞன் ஒருவர் குறித்த பேருந்து வளைவு ஒன்றில் திரும்புகையில் தூக்கி வீசப்பட்டார்.

இதன்போது படுகாயம் அடைந்த பிரஸ்தாபநபர் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பயனளிக்கப்படாத நிலையில் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

குறித்த சம்பவம் கடந்த 31ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## கைப்பணி பயிற்சியை நிறைவு செய்த பயனாளிகளுக்கு உபகரணங்கள்



(முல்லைத்தீவு)

உலக உணவுத்திட்டத்தின் நிதியனுசரணையுடன் பனை அபிவிருத்திசபையின் ஏற்பாட்டில் முல் லைத்தீவுமாவட்டத்தின்மாமூலை, சிலாவத்தை ஆகிய இடங்களில் 6 மாதகாலபயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த 82 பயனாளிகளுக்கான பனம் கைப்பணிபயிற்சிநிறைவு விழாவும் கைப்பணியாளர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

பனை அபிவிருத்தி சபையின் மாவட்ட இணைப்பாளர் பா.ரஜிபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 6 மாதகால பனம் கைப்பணி பயிற்சியை நிறைவு செய்த முல்லைத்தீவை சேர்ந்த 82 கைப்பணியாளர்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் கைப்பணியாளர்களினால் உருவாக்கப்பட்ட பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபை தலைவர் மா.கணபதிப்பிள்ளை, கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக உலக உணவுத் திட்டத்தின் பிராந்திய அலுவலக தலைமை அதிகாரி ஹசன், பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்க முகாமையாளர் தா.கோபாலகிருஷ்ணன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தி.தினேஸ்குமார், உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.(2-9-28)

## முல்லைத்தீவு மக்களுக்கான வாழ்வாதார திட்டங்கள் குறைவாக வழங்கப்பட்டுள்ளன

### சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா எம்.பி.சுட்டிக்காட்டு

வடக்கில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உட்கட்டுமான அபிவிருத்திப்பணிகள் இடம்பெற்றுள்ளதே தவிர, மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்துக்குரிய உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டிருப்பது மிகவும் குறைவாகும் என வன்னி மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது மக்களின் பொருளாதாரம் முற்று முழுதாக அழிக்கப்பட்டுள்ளன. எனவே மக்கள் அடி அத்திவாரத்திலிருந்து மீள்கட்டுமானத்தை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்..

கடந்த அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டமானது பெரிய கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வீதிகள் என கூடுதலானவை உட்கட்டுமான அபிவிருத்தியை நோக்கியே இடம்பெற்றிருக்கிறது.

ஆனால், மக்களின் உட்கட்டுமான அபிவிருத்தியை செய்ததே தவிர, அம் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவில்லை. அதனால்தான் இங்கு அபிவிருத்தியடையாத நிலையிலும் பின்னடைந்த ஒரு மாவட்டமாகவும் காணப்படுகிறது.

அது மாத்திரமின்றி, இந்த மாவட்டத்திலுள்ள மக்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கடல்வளம், பால், நெல் என்பன மூலப்பொருட்களாக தென்பகுதி உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாலும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் தடையாகவும் இருக்கிறது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதிலும் குறிப்பாக கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு போன்ற பிரதேசங்களில் சுமார் 35 வருடங்களுக்கு மேலாக எமது மக்களுக்கு பழைய தொழில் செய்வதற்குரிய இடம் வழங்கப்படவில்லை. அந்த பிரதேசங்களில் தென்பகுதி சிங்கள மீனவர்கள் இராணுவத்தினரின் உதவியுடன் மீன்களை பிடித்துச் செல்கிறார்கள்.

அதற்கும் மேலாக இந்திய மீனவர்களும் அத்துமீறி எமது கடற்பரப்பிற்குள் நுழைத்து மீன்களைப் பிடிக்கின்றனர்.

எனவே, முல்லைத்தீவு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பில் கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. விரைவில் அதற்குரிய சிறந்த தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார். (2-281)

# அரசாங்க நிறுவனத்தில் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதி தேவையில்லை

## அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் நிதி மோசடி விசாரணைப் பிரிவு என்பன ரக்னா லங்கா நிறுவனத்தின் ஆயுதங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த அறிக்கைகளை ஆராய்ந்த பின்னரே சட்டமா அதிபர், குறித்த நிறுவனத்திற்கு எதிராக துப்பாக்கிகள் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என நீதிமன்றத்தில் தெரிவித்தார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ரக்னா லங்கா நிறுவனம் என்பது அரச நிறுவனம் என்பதால், அந்த நிறுவனம் ஆயுதங்களை வைத்துக் கொள்ள புதிதாக அனுமதிப்பத்திரம் எதனையும் பெற வேண்டிய தேவையில்லை என்றும் குறிப்பிட்ட அமைச்சர்.

சட்டமா அதிபர் இலஞ்சம் வாங்கி கொண்டு நிறுவனத்திற்கு ஆதரவாக செயற்படுகிறார் எனக் குற்றம் சுமத்துவது ஏற்புடையதல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ-12)




# அரச பணிக்கு இணைத்துக் கொள்ளும் வயதெல்லை 10 வருடத்தால் அதிகரிப்பு

## அமைச்சர் ராஜித முன்மொழிவு

(கொழும்பு)

**அரசாங்க தொழிலில் இணைத்துக்கொள்வதற்கான வயதெல்லையை 10 வருடத்தால் அதிகரிக்க அனுமதி பெறுவதற்கான முன்மொழிவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் படவுள்ளது என சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அண்மையில் "கஜசவ் மித்துரோ" அமைப்பின் ஏற்பாட்டில் மதுகம சிபிகே மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச சேவையில் இணைத்துக்கொள்வதற்கான வயதெல்லை 30- 45 வரையாகும். வயது பிரச்சினையின் காரணமாக சிலரை அரச சேவையில் இணைத்துக் கொள்ள முடியாதுள்ளது. இதனால் பலர் வெறுப்படைந்துள்ளனர். மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் தீர்மானங்கள் எடுப்பது அவசியம். இதற்கு அரசியல் புரிந்துணர்வு அவசியம்.

பிரதமருடன் இது தொடர்பில் கதைக்க முடியும். கட்சியை மீட்டெடுக்கக்கூடியவர்கள் இல்லாவிடின் அக்கட்சி பாதிக்கப்படும். அதனால் எதிரியை பழிவாங்க வேறு நபர்களுக்கு வாக்குகள் வழங்குவர். ஒரு நபரினால் கட்சியே பாதிக்கப்படும். பணம் இருக்கும் நபருக்கு கௌரவத்தை பெற்றுக்கொடுப்பதுதான் தொழில். தகைமைகள் இல்லாத தொழிலும் இதுதான். இலஞ்சம் கொடுத்தாவது அரசியல்வாதியாக முடியும்.

இதனால் கட்சிக்கு பதிலாக மக்கள் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். சிலர் பதவிக்காக வேலை செய்கின்றனர். வேறு சிலர் நாட்டுக்காக பணியாற்றுகின்றனர். நான் நாட்டுக்காக சேவை செய்யும் குழுவில் உள்



ளேன். இதுவரை 5000 தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்துள்ளேன். களுத்துறை மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். ஜனவரி 8ஆம் திகதி பெற்றுக் கொண்ட வெற்றியை நாம்பாதுகாக்க வேண்டும் என்று அவர மேலும் தெரிவித்தார். (இ-7-10)

### கரையொதுங்கிய பையில் பெண்ணின் உடற்பாகங்கள்

கறபிட்டிய - எரபுதுவ தீவில கரையொதுங்கியுள்ள பையொன்றில் இருந்து பெண்ணொருவரின் உடற்பாகங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை மீனவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரால் குறித்த உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கற்பிட்டிய - ஜனசவிபுர கிராமத்தில் இருந்து 150 மீற்றர் வரையான தூரத்தில் இவை இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பையில் உடற்பாகங்களை இட்டு மண்ணை நிரப்பிய பின்னர் அதனை நீரில் மூழ்கடித்திருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பை வெடித்து அதிலிருந்த மண் வெளியேறிய பின்னர் அது கரையொதுங்கியுள்ளது.

மேலும் ஒரு வாரங்களுக்கு முன்னர் குறித்த உடற்பாகங்கள் அந்த இடத்திற்கு கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## கலைப்பொருட்கள் களவாடப்பட்ட விடயத்தில் எஸ்.பிக்கு தொடர்பா?



கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட, கொழும்பு 7 இல் அமைந்துள்ள வீடொன்றிலிருந்த கலைப் பொருட்கள் களவாடப்பட்ட விடயத்தில் முன்னாள் உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எஸ்.பி.திஸாநாயக்க சந்தேக நபரா? என்பதை ஆராயுமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவிட்டிருந்த போதிலும் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

குறித்த சம்பவத்தின் சந்தேக நபர் யார் என கூறுமாறு எஸ்.பி.திஸாநாயக்க சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி தவராஜா நீதிமன்றில் கோரியுள்ளார்.

சந்தேக நபர் எஸ்.பி. திஸாநாயக்க என கட்டுக் கதைகள் பரவிக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் சந்தேக நபரா? இல்லையா? என்பது தொடர்பில் விசாரணைகள் நிறைவடையவில்லை என குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தங்களால் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாதுள்ளதாகவும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியை நாடியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு 7 இல் உள்ள குறிப்பிட்ட கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் சிவா சின்னத்தம்பி என்பவருக்கு சொந்தமானதெனவும் அவர் உயிரிழந்த பின்னர் அவரது சொத்துக்கள் கொழும்பு பல்கலைககழகத்திற்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## 40 ஆயிரம் கஞ்சா பொதிகளுடன் ஆஸி.செல்ல முற்பட்ட நபர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் மற்றும் கஞ்சாப் போதைப் பொருட்களை விற்பனை செய்து வரும் கடற்றொழிலாளியொருவர் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முற்பட்ட போது வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை வெலிகம - மிரிஸ்ஸ மீன்பிடித் துறை முகத்தில் இடம்பெற்றுள்ளது.

36 வயதான இந்நபர் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் இதே குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு விளக்கமறியலிலிருந்து விடுதலையானவர் ஆவார். இவருக்கு எதிராக நான்கு வழக்குகள் நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் இவர் மேலதிக தொழிலாக ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருட்கள் விற்பனையில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருகின்றமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர் கைது செய்யப்படும் போது 40 ஆயிரம் கஞ்சாப் பக்கெற்றுக்கள் கைப்பற்றப்பட்டன.

இப்பக்கெற்றுக்களை இவர் 500 ரூபா வீதம் விற்பனை செய்து வந்துள்ளார். (இ-7-10)

# பொலிஸாரை அழைக்க அனுமதி தேவையில்லை

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)


பாராளுமன்றத்துக்கு அண்மித்த பகுதியில் மேலதிக பாதுகாப்புக்காக பொலிஸாரையோ அல்லது இராணுவத்தினரையோ அழைப்பதற்கு சபாநாயகரின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயம் இல்லையென சபாநாயகர் கரு ஜயசூரிய பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு நுழையும் வீதிகளில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் ஐ.ம.சு.மு பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கேள்வியெழுப்பியிருந்தார். இதற்கு சபாநாயகரின் அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என அவ்ர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்து பதிலளிப்பதாக சபாநாயகர் நேற்றுமுன்தினம் கூறியிருந்தார். இதற்கமைய நேற்று சபாநாயகர் கரு ஜயசூரிய பதில் வழங்கியிருந்தார்.


இந்த விடயம் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு தான் விசாரித்திருந்ததாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார். பாராளுமன்றத்தை நோக்கி பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பேரணியாக வருவதால், மேலதிக பாதுகாப்புக்காகவே பொலிஸாரும், இராணுவத்தினரும் பாராளுமன்றத்துக்கு நுழையும் வீதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாக பதில் பொலிஸ்மா அதிபர் தன்னிடம் கூறியதாக சபாநாயகர் தெரிவித்தார். எனினும் பாராளுமன்றத்துக்கு வரும் மக்கள் பிரதிநிதிகளுக்கோ அல்லது மக்கள் பிரதிநிதிகளைச் சந்திக்க வரும் மக்களுக்கோ எதுவித பாதிப்போ தடையோ ஏற்படுத்தப்படவில்லை.

பாராளுமன்றத்துக்கு வந்த எந்தவொரு வாகனமோ அல்லது தனிநபரோ விசேடமான சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. பாராளுமன்ற வளாகம் தவிர்ந்த அண்மித்த பகுதியில் விசேட பாதுகாப்புக்காக பொலிஸாரையோ அல்லது இராணுவத்தினரையோ அழைப்பதற்கு சபாநாயகரின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயம் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)










அரசியற் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக்கோரி கைதிகளின் விடுதலை குறித்து கோரிக்கைகளை முன்வைத்து துண்டுப்பிரசுரங்கள் சமவுரிமை இயக்கத்தால் நேற்றைய தினம் யாழ். நகரிலுள்ள பல இடங்களில் விநியோகிக்கப்பட்டன. அரசியற்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யக்கோரி, சமவுரிமை இயக்கத்தால் நாடு முழுவதும் சுவரொட்டி பிரசாரம் மற்றும் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (படங்கள்; பொ.சோபிகா)







பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொலிஸ் அணிவகுப்பில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் மார் மாசிங்கா மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜபார் ஆகியோர் கலந்து கொண்டு அணி வகுப்பை ஏற்றுக்கொண்டனர். மேற்படி அணி வகுப்பானது பருத்தித்துறை நகரப்பகுதி, பேருந்து நிலையம் வரை சென்று நிறைவடைந்தது. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)










யாழ்.பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது...



யாழ்.ஊரெழு கணேசா வித்தியாசாலையின் பரிசளிப்பு தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிக்கு நிகழ்வின் முதன்மை விருந்தினர் துவிச்சக்கரவண்டியினையும் நினைவுச் சின்னத்தினையும் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் மற்றும் ஏனைய விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். -(படம்:-உ.சாளின்)



வாசிப்பு தினத்தை முன்னிட்டு சங்கானை சிவப்பிரகாசம் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிவன் அமைப்பின்தலைவர் வே. கணேஷ்வரன் பாடசாலை நூலகத்திற்கு புத்தகங்கள்பெற்றுக்கொள்வதற்கு அதிபர் மகிந்தரராஜாவிடம் 10ஆயிரம் ரூபா காசோலை வழங்குவதைப் படத்தில் காணலாம்.





ஒரே மக்களின் ஒருமைப்பாடு பாசறையின் மாணவர்களுக்கான வதிவிடமுகாமின் 4நாட்கள் கொண்ட பரிசளிப்பு விழா யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாணத்தில் இருந்து 280 பேர் பங்குபற்றியிருந்தனர்.




போதைப்பொருள் பாவனைகளை விடுத்து நல்வாழ்வுக்காக சிந்தியுங்கள் சிக்கனத்தை கடைப்பிடித்து சேமிப்பை தூண்டுங்கள் என்ற தொனிப்பொருளில் அமைந்த போதைப்பொருள் விழிப்புணர்வுப் பேரணி ஒன்றினை தேசிய சேமிப்பு வங்கி யாழ். கிளையினர் அண்மையில் நடத்தியிருந்தனர். கிளையின் இரண்டாம் தர முகாமையாளர் திருமதி துஷ்யந்தி அருளானந்தம் தலைமையில் மேற்படி விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது. (படங்கள்.- காரைநகர் செய்தியாளர்)

# ஐ.எஸ்.அமைப்பு தனிநாடு பிரகடனம் தலைநகராக ராக்கா அறிவிக்கப்பட்டது

(ராக்கா)

**சிரியா, ஈராக்கில் சில பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி தனி நாடாக அறிவித்துள்ளனர். இந்த நாட்டின் தலைநகராக சிரியாவில் உள்ள ராக்கா நகரம் அறிவிக்கப்பட்டுள்ளது.**




ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது சிரியா, ஈராக் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், அமெரிக்க கூட்டு படைகளும், ரஷ்யாவும் விமான தாக்குதல் நடத்துகிறது. நேற்று முன்தினம் ராக்கா நகரில் சிரியா விமானப் படையும், ரஷ்ய விமானப் படையும் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தின. இடைவிடாது குண்டுமழை பொழிந்தது.

இதில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பல்வேறு ஆயுத கிடங்குகள் தகர்க்கப்பட்டன.

30இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அங்குள்ள வைத்தியசாலையைத் தவிர அனைத்து இடங்களிலும் குண்டு வீச்சு நடந்ததாக தகவல்கள் வெளிவந்துள்ளது. இறந்தவர்களில் பலர் அப்பாவி மக்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரில் நடந்த தாக்குதலால் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற் கிடையே தீவிரவாதிகள் பிடியில் இருந்த புராதன நகரான பல்மைராவிலும் ரஷ்ய விமானங்கள் குண்டு வீசியுள்ளன. (3-7)

# கட்டடம் இடிந்து விழுந்ததில் பாகிஸ்தானில் 16 பேர் பலி!



(லாகூர்)

பாகிஸ்தான் லாகூர் நகரில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு தொழிற்சாலை கட்டடம் இடிந்து விழுந்ததில் குறைந்தது 16 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் 150 தொழிலாளர்கள் சிக்கியிருக்கலாம் என்று அவசர சேவைகளை மேற்கொள்வோர் கவலை தெரிவித்துள்ளனர்.

மிகப் பெரிய மீட்பு நடவடிக்கை அங்கு முன்னெடுக்கப்படுகிறது.

உதவி கேட்போரின் அழுகைக் குரலை, இடிபாடுகளுக்கு கீழிருந்து கேட்கக்கூடியதாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது மாடி கட்டப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், இரண்டாவது அடுக்குகளில் தொழிற்சாலை இயங்கிக்கொண்டிருந்தது.

கடைகளில் சாமான்கள் வாங்க எடுத்து செல்லும் பைகளைத் தயாரிக்கும் இந்த தொழிற்சாலை, நகருக்கு வெளியே சுந்தர் இந்தஸ்டிரியல் எஸ்டேட் எனுமிடத்தில் அமைந்துள்ளது.

இங்கு சிறார்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என "திடான்" என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் , அது அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த விபத்தில் காயமடைந்த 45 பேர் அப்பகுதியிலுள்ள வெவ் வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கபபட்டுள்ளனர் என அரச தொலைக்காட்சியொன்று தெரிவித்துள்ளது.

மீட்பு நடவடிக்கைகளில் பங்கு பெற, பொறியாளர்கள் மற்றும் நிபுணர்கள் குழுவினர் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் லாகூரிலுள்ள மசூதி ஒன்றின் கூரை இடிந்து விழுந்ததில், 24 பேர் கொல்லப்பட்டனர்.

2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நகரின் குடியிருப்பு பகுதியில் நடந்த எரிவாயு வெடிப்பு சம்பவத்தையடுத்து, தொழிற்சாலையொன்று இடிந்து விழுந்ததில் குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர். (3-7)




# ஐ.எஸ்.தீவிரவாதிகள் குண்டு வைத்து விமானத்தை சிதறடித்து இருக்கலாம்

## அமெரிக்க-பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவிப்பு



(லண்டன்)

எகிப்து நாட்டின் சுற்றுலா நகரமான ஷரம் எல் ஷேக் நகரில் இருந்து கடந்த சனிக்கிழமை ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு 224 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் ஒரு விமானம் புறப்பட்டது. அந்த விமானம் கிளம்பிச் சென்ற 23 நிமிடங்களில் எகிப்தின் சினாய் தீபகற்ப பகுதியில் நெகேல் என்னுமிடத்தில் நடுவானில் நொறுங்கி விழுந்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 224 பேரும் பலியானார்கள்.என்ன காரணத்தால் விமானம் நொறுங்கி விழுந்து விபத்துக்கு உள்ளானது என்பது குறித்து இதுவரை எந்த முழுமையான தகவலும் கிடைக்கவில்லை.

ஐ.எஸ். தீவிரவாதிகள் நாங்கள் தான் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தினோம் என்று அறிவித்து இருந்தனர். அதற்கான வீடியோ ஆதாரத்தையும் வெளியிட்டு இருந்தனர்.

விமானம் விபத்தில் சிக்கியது பற்றி கொமல்யமாவியா நிறுவன இயக்குநர் அலெக்ஸாண்டர் சிமிரோவ் மொஸ்கோ நகரில் கூறும் போது,

விபத்துக்குள்ளான விமானத்தில் எந்த தொழில்நுட்ப கோளாறும் கிடையாது. விமானம் பறந்த போது மிகவும் நல்ல நிலையில் தான் இருந்தது. அதேபோல் விபத்துக்கு விமானிகளின் தவறும் காரணம் கிடையாது.விமான விபத்து நிகழ்ந்ததற்கு சில விதமான வெளிப்புற நடவடிக்கைகள்தான் காரணம் என்ற ஒரே விளக்கத்தை மட்டுமே தர முடியும் என்று கூறினார். ஆனால் இதை எகிப்து ஜனாதிபதி மறுத்து உள்ளார்.

பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இது குறித்து கூறும் போது ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டமிட்டு வெடிகுண்டு மூலம் சிதறடிக்கப்பட்டு இருக்கலாம் என கூறி உள்ளனர். பிரிட்டன் அரசு கால வரையறையின்றி சினாய் தீபகற்பத்தில் செல்லும் விமானங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக கூறியுள்ளது. (3-7)

# அமெரிக்காவில் அதிகம் பேசப்படும் மொழிகளில் இடம்பெற்ற தமிழ்மொழி

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தமிழ்மொழி சுமார் 1,90,000 பேரால் பேசப்படுகிறது என்று தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் சுமார் 60 மில்லியன் மக்கள், தங்கள் வீடுகளில் ஆங்கிலம் தவிர்த்து ஏனைய மொழிகள் பேசுவது மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்த சமூக ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆங்கிலத்தைத் தவிர்த்துப் பேசும் ஏனைய மொழிகளில் ஸ்பானிய மொழி 37.4 மில்லியன் மக்களோடு முதலிடத்தைப் பிடித்துள்ளது.

3.7 இலட்சம் பேர் குஜராத்தி மொழி பேசுகின்றனர். 2.5 இலட்சம் பேர், வீட்டில் தெலுங்கு பேசுகின்றனர்.

தமிழ் மொழி சுமார் 1,90,000 பேரால் பேசப்படுகிறது. மலையாளத்தை சுமார் 1,46,000 பேர் பேச, கன்னட மொழி சுமார் 48,000 பேரால் பேசப்படுகிறது.

மேலும், 73,000 பேர் மராத்தியும் பெங்காலி மற்றும் பஞ்சாபி மொழிகளை 2.5 இலட்சம் மக்களும் பேசுகின்றனர் என்று தெரிய வந்துள்ளது. (3-7)

# ஐரோப்பாவுக்கு 8 லட்சம் அகதிகள்

ஐரோப்பிய ஒன்றியத்தை இந்த வருடம் சட்டவிரோதமாக சுமார் 80 இலட்சம் குடியேற்றவாசிகள் வந்தடைந்துள்ளதாக பிராந்திய எல்லை முகவர் நிலையமான புரொன்ரெக்ஸ் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

ஆபத்து மிக்க கடல் பயணத்தை மேற்கொண்டு மத்தியதரைக் கடலைக் கடந்து 744,000 குடியேற்றவாசிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை வந்தடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவர் நிலையம் அண்மையில் தெரிவித்துள்ள நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. (3-7)





லண்டன் மத்திய பகுதியில் அரசாங்கத்துக்கு எதிராக மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்று ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் பொலிஸாருக்கும் மாணவர்களுக்குமிடையிலான பெரும் வன்முறையாக உருவெடுத்தது.

கல்வி நடவடிக்கைகளுக்கு கட்டணம் அறவிடுவதை நிறுத்தக்கோரி அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தாஜ்மஹால் அழகில் சொக்கிப்போன பேஸ்புக் நிறுவனர் மீண்டும் இந்தியாவுக்கு



பேஸ்புக் சமூகவலைத் தளத்தின் நிறுவனர் மார்க்ஜுக்கர்பெர்க் சமீபத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் ஆக்ராவில் உள்ள உலக அதிசயமான தாஜ்மஹாலை கண்டு வியந்தார். இதுதொடர்பாக டில்லி ஐ.ஐ.டி.மாணவர்களிடம் அவர் கூறும் போது, "தாஜ்மஹாலுக்கு சென்ற அனுபவம் எப்படி இருந்தது என்று கேட்கிறீர்கள்.வியப்புஅளிக்கிறது. படத்தில் பார்ப்பதை விடநேரில்பார்க்க அபாரமாக இருக்கிறது" என உருகியுள்ளார். இந்த நிலையில், தாஜ்மஹாலை சுற்றிப்பார்த்த போது எடுத்த படங் களை அவர் 'பேஸ்புக்' பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் அவர், "தாஜ்மஹாலை வலம் வந்த போது எடுத்த கடைசிப்படம் இது" என ஒரு படத்தில் குறிப்பிட்டிருப்பதுடன், "நான் விரைவில் மீண்டும் இந்தியாவுக்கு வருவேன். என்னால் காத்திருக்க முடியாது" எனக்கூறியிருக்கிறார்.

இது 'பேஸ்புக்' வலைத்தளத்தில் ஏகோபித்த வரவேற்பை பெற்று விட்டது. 6 இலட்சத்து 6 ஆயிரத்துக்குமதிகமானோர் 'லைக்' தெரிவித்துள்ளனர். 8,400 பேர்கருத்து தெரிவித்துள்ளனர்.4,689 பேர் அந்த புகைபடத்தை பகிர்ந்து கொண்டனர்.(3)

## உலகளவில் பலம்வாய்ந்த 10 நபர்களில் முதலிடத்தை பிடித்த விளாமிடிர் புடின்

உலகளவில் பலம் வாய்ந்த 10 நபர்கள் தொடர்பாக ஃபொர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முதலிடத்தை பிடித்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த ஃபொர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் உலக அளவில் சக்தி வாய்ந்த பத்து நபர்கள் தொடர்பான பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு அந்த பத்திரிகை வெளியிட்டுள்ள பட்டியலில் ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான நிலைப்பாட்டினால் புடினுக்கு ஆதரவு பெருகியுள்ளது என்றும் அதன் காரணமாகவே அவர் முதலிடம் பிடித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அகதிகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் ஜேர்மனியின் சான்சலர் ஏஞ்சலா மேர்கெல் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு மூன்றாவது இடமே கிடைத்துள்ளது. ஆட்சியில் உள்ள ஒரு அமெரிக்க ஜனாதிபதி முதல் இரண்டு இடங்களுக்குள் வராமல் இருப்பது இதுவே முதலிடமாகும்.

இந்தியா பிரதமர் நரேந்திர மோடி 6 இடங்கள்முன்னேறி 9வது இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

1.விளாடிமிர் புடின்- ஜனாதிபதி, ரஷ்யா
2.ஏஞ்சலா மேர்கெல் சான்சலர், ஜேர்மனி.
3.பாராக் ஒபாமா- ஜனாதிபதி, அமெரிக்கா
4.போப் பிரான்சிஸ்- போப், ரோமன் கத்தோலிக்க திருச்சபை
5.ஷி ஜின்பிங் -சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்
6.பில் கேட்ஸ் - பில் ரூ மெலிண்டா கேட்ஸ்
7. ஜெனட் யெல்லென் - ஃப்டரல் வங்கியின் சேர்மென்
8.டேவிட் கமரூன் -பிரித்தானிய பிரதமர்
9.நரேந்திர மோடி - இந்திய பிரதமர்
10.லாரி பேஜ்- கூகுள் நிறுவனத்தின் துணை நிறுவனர். (3-7)

## இந்தோனேசியாவில் எரிமலை சீற்றம் 700 விமான சேவைகள் இரத்தானது

இந்தோனேசியாவின் இரண்டாவது பெரிய எரிமலை, ரிஞ்ஜனி எரிமலை. இது அந்த நாட்டின லாம்பாக்தீவில்உள்ளது.இந்த எரிமலையில் கடந்தவாரம் சீற்றம்ஏற்பட்டது. இதன் காரணமாக எரிமலை உச்சியில் இருந்து பெருமளவு சாம்பல் வெளியேறி வருகிறது. இந்த சாம்பல், விமானங்களின் என்ஜின்களில புகுந்தால் அவை செயல் இழந்துவிடும் ஆபத்து இருக்கிறது.

இதன் காரணமாக பாலியில் உள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டது. இன்றுவரை அது மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த விமான நிலையம் மூடப்பட்டுள்ளதால், 700 விமானசேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எரிமலை வெடிப்பு நிலவரத்தை ஆய்வு செய்து தான விமான நிலையதை மீண்டும் திறப்பது பற்றியும், விமானங்களை இயக்குவது பற்றியும் முடிவு எடுப்போம் என விமான நிலைய அதிகாரிகள் கூறினர்.

இதன்காரணமாக, பாலியில்கைது செய்யப்பட்டுள்ள நிழலுலகதாதா சோட்டாராஜன், இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வருகிற தகவல்கள் கூறுகின்றன. (3-7)

## விடுதி தீவிபத்துக்கு பொறுப்பேற்று ருமேனியா பிரதமர் பதவி விலகல்

ருமேனியா நாட்டின் தலைநகர் புகாரெஸ்ட் இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 32 பேர் பலியானர்கள். 100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட விடுதிக்கு இலஞ்சம் பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கியதால் தான் தீ விபத்து ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.

இதை தொடர்ந்து ருமேனிய பிரதமர் விக்டோர் பாண்டா இராஜினாமா செய்ய வலியுறுத்தி நேற்று முன்தினம் புகாரெஸ்ட்டில் பொது மக்கள் கண்டன பேரணி நடத்தினார்கள். இப்போராட்டத்தில் மொத்தம் 20 ஆயிரம் பேர் கலந்து கொணடனர். மக்களின் போராட்டத்திற்கு



பணிந்து பிரதமர் விக்டோர் பாண்டா நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்தார். மேலும் பாராளுமன்றம் கலைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

## 2019 இல் மூன்றாம் உலகப்போர்?

(சென்னை)

'நிலநடுக்கங்கள், கிரகணங்களின பின்னணியில் வேற்றுக் கிரகவாசிகளான ஏலியன்கள் இருக்கிறார்கள். 2019இல் ஏலியன்களால் மூன்றாம் உலகப் போர் நடக்கும் ஆபத்தும் இருக்கிறது' என்ற திகில் கடிதத்தை டைம்பாஸ்'க்கு அனுப்பியிருந்தார் கும்பகோணத்தைச் சேர்ந்த கே.பெரியசாமி. ஏலியன்களை எண்களோடு தொடர்புபடுத்தி ஆராய்ச்சி செய்து வரும் டெலிபதி நிபுணரான பெரிய சாமி இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது,

"கும்பகோணம்தான் எனது சொந்த ஊர். 3 1/2 வயசு இருக்கும் போது சிறுநீர்கழிக்க ஒரு சந்துக்குள் போனேன். அரவான் சிலையைப் பார்த்திருக்கீங்களா? அதேமாதிரி ஓர் ஏலியன் அங்கே இருந்த திண்ணையில தலையாட டிக்கிட்டே உட்கார்ந்திருந்தது. மெதுவா அதுக்குப் பக்கத்துல போய் தொட்டுப்பார்த்தேன். கொழகொழனு பாம்பைத் தொட்ட மாதிரி உணர்ச்சி. பயத்துல காட்டுக்கத்து கத்த ஆரம்பிச்சுட்டேன். அப்புறம் எங்க அம்மாதான் அந்த ஏலியனை விரட்டிவிட்டாங்க" என்று ஆரம்பிக்கும் பெரியசாமிக்கு வயது 60. திருமணம் ஆகவில்லை. தினம் தினம் நினைத்த நேரத்தில் 'டெலிபதி' மூலமாக ஏலியன்களுடன் பேசுவாராம், பார்க்கத் தோன்றினால் கனவு வழியாகப் பார்த்துக்கொள்வாராம்.

"எங்க அம்மா எல்லா கடவுள்கள்கிட்டேயும் சகஜமா பேசுவாங்க. அவங்க மூலமாதான் எனக்கு இந்தப் பிரபஞ்ச சக்தி கிடைச்சுது. அந்தப் பிரபஞ்ச சக்தி மூலமாதான் நான் ஏலியன்ஸ்கூட பேசிட்டு இருக்கேன். ஒருத்தர் மனசுக்குள்ள புகுந்து 'டெலிபதி' மூலமா பேசுற வித்தையை எனக்குச் சொல்லிக் கொடுத்தது அவங்க தான் என்று விசாரித்துக் கொண்டே செல்கிறார் அவர். (3)

# இலங்கையில் நீதியை நிலை நிறுத்த முடியும்!

ஆட்கள் கடத்தப்படுவது, காணாமற் போதல்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு (பரணகம ஆணைக்குழுவென பொதுவில் குறிப்பிடப்படுவது) மற்றும் மோசமான மனித வுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்து விசாரணை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு (உடலகம ஆணைக் குழு) என ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட இரண்டு உள்ளக விசார ணைக்குழு அறிக்கைகளுமே இந்த வார பாராளுமன்ற அமர்வுகளின் போது பெருங்குளவி கூண்டினை சீண்டியது போன்றதொரு





நிலையை உருவாக்கியிருந்தன. இந்த இருவித ஆணைக் குழு அறிக்கைகளுமே 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவந்த வடபுல தமிழ் மக்களது எழுச்சியை அடக்குவதற் கென அரசினால் மிகவும் நீடித்த விதமாக மேற்கொள்ளப்பட்ட போரின் அபரிமித விளைவுகளின் அடிப்படையில் எழுந்தவையேயாகும். இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் மட்டில் விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டுமென்ற ஐ.நா.மனிதவுரிமைச் சபையின் தீர்மானத்தை எவ்விதம் கையா ள்வதென்ற பிரச்சினைக்குரிய விடயம் பற்றிய மனப்போராட்டத்தில் புதிய அரசு ஈடுபட்டிருக்கும் நேரத்தில் மேற்படியான இந்த ஆரம்ப குளவிக்கொட்டு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது இலங்கை அரசியல் சூழலில் தொடர்ந்தும் இடம் பெறப் போகும் நிகழ்வுகளுக்கு அநேகமாக முன்கூட்டியே கட்டியம் கூறும் ஒன்றாகவே இருக்கிறது.

நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம அறிக்கைகள் மற்றும் நீதியரசர் நிசங்க உடலகம அறிக்கைகள் இரண்டிலுமிருந்து சில விபர ஆவணங்கள் சில மாதங்களுக்கு முன்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதியாக அவை இப்போது தான் விலாவாரியான விவாதத்திற்கு முழுமையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்கள், முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போன்ற ஓர் நிலையையே மேலோட்டமான ஓர் பார்வையாக கொடுத்திருந்தன. அதாவது தற்போது நடைமுறையிலிருக்கும் தேசிய அரசாங்கம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நலிவடைந்து போனதாகத் தற்போது எஞ்சியிருக்கும் இன்றைய எதிர்க் கட்சியின் தற்போதைய போக்கே அங்கு படம் பிடித்துக் காட்டப்பட்டது போலிருந்தது. சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக எமது நாட்டின் ஆயுதப் படைகளை அரசு காட்டிக்கொடுக்கிறது என்ற உணர்ச்சிகரமான குற்றச்சாட்டே எழுப்பப்பட்டு குழப்பநிலை உருவாக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தை தாக்குவதற்கு அவர்களது கையில் உடன் கிடைத்த ஆயுதமே அதுதான்.

இந்தவிடயத்தில் ஆயுதப் படை களுக்கிடையில் ஏற்படக்கூடிய எந்தவித குழப்ப நிலைகளாலும் விளையக் கூடிய ஆபத்துக்களையிட்டு அரசு எந்நேரமும் மிகுந்த விழிப்புடனேயேயுள்ளது. ஜனநாயக ஆட்சியொன்றில் அரச ஆயுதப் படைகளுக்

**இலங்கையில் நீதியை நிலைநிறுத்த முடியும் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழக்கம் இங்கு பிரசுரமாகிறது**

கிடையில் உருவாகும் அதிருப்தியே ஆபத்திற்குரிய படுமோசமானதொரு நிலைமையாகும். விரைந்து சுதாரித்துக் கொண்ட அரசு சீருடை தரித்த ஆண்,பெண் இருபாலாருமே எந்தவிதத்திலும் பாதுகாக்கப்படுவர் என்று கூறியது. இடம்பெறவிருப்பவை போலியானதொரு போர்க்குற்றவியல் விசாரணையே என்ற விதமான ஒரு தோற்றப்பாட்டையே இந்தவிதமான கூற்றுக்கள் குற்றச்சாட்டுக்களின் பால் ஈர்த்துக்கொள்ளும். அரசாங்கம் உட்பட்டிருக்கும் சிக்கலான கடின் சூழ்நிலைகளில் ஆயுதப் படைகளுக்கு அநீதி விளைவிக்கப்படமாட்டாது என்ற உறுதியை அரசும் மீள அவர் களுக்கு வழங்கியிருக்குமானால் அது மேலும் சிறப்பானதாகவே அமைந்திருக்கும்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் மட்டில் நீதியரசர் ஒருவரது தலைமையில் சுதந்திரமான விசாரணையொன்றே தேவைப்படும் என்பதே பரணகம ஆணைக்குழுவின் குறிப்பிடத்தக்க நிலைப்பாடாக இருந்தது. ஒட்டு மொத்த இராணுவமும் தவறிழைத்திருக்க முடியாது என்றவகையில் எடுத்த எடுப்பிலேயே பார்வைக்கு ஆதாரமுள்ளவையாகத் தோன்றும் தனித் தனிச் சம்பவங்கள் இருந்தாலும் அவற்றையும் மேலதிக விசாரணையே தீர்மானிக்குமென்பதால் பிழை பிடிப்பதற்காகவே தான் இராணுவக் குற்றவியல் விசாரணை நடைபெறுகிறது என்பது பொருளல்ல என்ற விளக்கத்தையே அந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

ஐ.நா.மனிதவுரிமைச் சபை அறிக்கையானது பரணகம ஆணைக் குழுவைக் கலைத்து விடும்படி கேட்டுக்கொண்டமை இந்த சர்வதேச முகவர்கள் இலங்கை அரசின் நீதி



நிர்வாக முறைமைகள் மீது பொதுவாகவே கொண்டுள்ள தமது அவ நம்பிக்கையையும் தவறான அவசர தீர்மானத்தையும் தாமாகவே வெளிக் காட்டுவதாயுள்ளது. எல்.எல்.ஆர். சி.விடயத்திலும் (கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்கப்பாட்டிற்குமான ஆணைக்குழு) இதுவே தான் நிகழ்ந்தது. அதாவது ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புகளை உடனடியாகவே வரவேற்காத அதன் உறுப்பினர்கள் காலந் தாழ்த்தி அவற்றை பின்னரே வரவேற்றிருந்ததன் மூலம் அவர்கள் அரசின் கைப் பொம்மைகளாகவேதான் செயற்பட்டிருந்ததாக அதே சர்வதேச சமூகத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

உண்மையில் பரணகம ஆணைக் குழுவானது எல்.எல்.ஆர்.சீ. ஆணை க்குழுவுக்குமப்பால் மட்டுமல்லாது அதனிலும் கூடுதலாக ஐ.நா.மனிதவுரிமைச் சபையையும் தாண்டிய விதமாக வெளிநாட்டு நீதிவிசாரணையையே கோரியிருந்தது. இந்த விதத்தில் இறையாண்மையுள்ள ஒரு தேசத்தின் சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் சவாலான உணர்வுபூர்வ விடயமாக இருந்துவரும் இலங்கையின் நீதியியல் நடைமுறைகள் மட்டிலான நீண்ட கால நம்பகத்தன்மைக்கு மாறாக அதனை அது எவ்வளவோ தரமிறக்கியதாயிற்று. இலங்கையில் குடிநீர் ஆராய்ச்சிகளுக்கென தொழிற்பட்ட வெளிநாட்டு ஆலோசகர்கள், சட்ட நிபுணர்கள் மற்றும் நீதிபதிகள் போன்றோரது வருகையை நியாயப்படுத்தும் முயற்சிகளிலீடுபட்டிருக்கும் அரசு அதேநேரம் அவ் ஆராய்ச்சிகள் உள்ளூரிலேயே இடம்பெறுவதால் அது ஓர் உள்ளகப் பொறிமுறையே என்றும் உள்வருகின்ற வெளிநாட்டவர்கள் எவருமே அரசுடன் சேர்ந்திணைந்தே செயற்பட வேண்டுமென்றும் வலியுறுத்தி வருகிறது.

பாராளு மன்றத்திலும் அமைச்சரொருவர் சாம்பியாவிலும் இதேவித குற்றவியல் விசாரணை யொன்று அதன் நம்பகத் தன்மையின் பொருட்டு வெளிநாட்டு பங்கேற்புடன் நிகழ்த்தப்பட்ட சம்பவத்தை உதாரணமாக எடுத்துக் காட்டி இலங்கை விடயத்திலும் அத்தகைய விசாரணையொன்றை நியாயப்படுத்தியிருந்தார். இவ்வித ஒப்பீடுகளை மேற்கொள்ளும் நிலைக்கு எமது நாடு எவ்வளவு தாழ்ந்து விட்டது!

முன்னாள் ஜனாதிபதியுங்கூட இதுமட்டிலான விவாதத்தில் உடனடியாகவே குதித்திருந்தார். தனது ஆட்சியின் போது சர்வதேச சட்ட நிபுணர்களது ஆலோசனையை அரசு கோரியதே




தவிர எமது நாட்டிலேயே நீதிபதிகளாக அவர்கள் வந்து அமர்ந்து கொள்வதற்காக அல்ல என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். தற் போதைய அரசும் இவ்வித நகர்வு பற்றியே ஆழ்ந்து சிந்தித்து வருவதாக தெரிகிறது.ஒரு காலத்தில் அனல் தெறிக்கப்பேசி செயலாற்றி வந்த சட்டத்தரணிகள் சங்கமும் வெளிநாட்டு வழக்காளிகள் தரப்பு சட்டத்தரணிகளை எமது நீதிமன்றங்களில் வழக்காட அனுமதிப்பதா? இல்லையா? என்று தெரியா மல் அசாதாரண முறையில் மௌனம் காப்பதுடன் உச்ச நீதிமன்றமும் நீதியியல் நடைமுறைகள் மற்றும் அரசியலமைப்பு முரண்பாடுகள் மட்டில் காலத்திற்குக்காலம் சவாலை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். (தொடரும்)

**தமிழில்:-யோகர்**

# கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய முடியாது!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் கலப்பு விசாரணையையும் சர்வதேச நீதிபதிகளையும் எதிர்ப்பதாக கூறிக் கொள்ளும் தேசப்பற்றாளர்கள் இலங்கையில் நீதித்துறை மீது நம்பிக்கையில்லை என்கிறார்கள். இதுவா இவர்களது தேசப்பற்று என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

"அவன்கார்ட்" விவகாரத்தைப் பயன்படுத்தி கோத்தபாய ராஜபக்ஷவை கைதுசெய்ய முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அவன்கார்ட் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சட்டமா அதிபரோ திணைக்களமோ அவன்கார்ட் நிறுவனத்திற்கு சார்பாக எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. சட்டமா அதிபர் நேர்மையாக செயற்படுபவர்.

அவருக்கு சுவிஸில் வங்கிக் கணக்கு இருப்பதாக கூறப்பட்டது. அங்கு சேமிப்பில் 6 சதமேனும் அவருக்கு இருப்பதாக நிரூபித்தால் நான் பதவி விலகுவேன்.

அவன்கார்ட் நிறுவனத்திற்கு எதிராக வெடிமருந்துகள், கொள்கலன்கள் விவகாரம் தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தது. சட்டமா அதிபரும் தெரிவித்தார்.

பொலிஸார் விசாரித்து குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டால் தான் குற்றவியல் தண்டனையின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

அவன்கார்ட் மிதக்கும் கப்பல் ஐ.நா.பிரகடனங்களுக்கு அமையவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதில் எவ்விதமான குற்றவியல் காரணங்களும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# டுபாயில் பணம் வைப்பு; முக்கியஸ்தர் மகன் யார்?

## பிரசன்ன ரணதுங்க கேள்வி

டுபாய் வங்கியில் பெருமளவு பணத்தை முதலீடு செய்துள்ள முக்கியஸ்தரின் மகன் யார் என்பதை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

டுபாயில் இலங்கையின் அதிமுக்கியஸ்தர் ஒருவரின் மகன் பல மில்லியன் டொலர் தொகையை முதலீடு செய்துள்ளதாக அரசாங்கம் அண்மைக்காலமாக கூறிவருகிறது.



எனினும் அவர் யார் என்ற விடயத்தை வெளியிடவில்லை. இந்த நிலையில் அவர் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று பிரசன்ன ரணதுங்க கோரியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இதேவேளை எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வலுவான கட்சியாக உருவாக முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தேர்தல்களிலும் மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைக்க முயற்சித்த போதும் கட்சியின் செயல்களால் அது தோல்வியடைந்ததாகவும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# கலைஞர்களிடம் விசாரணை நடத்துவது நகைப்பிற்குரியது

## தயாசிறி ஜயசேகர விமர்சனம்



(கொழும்பு)

ஊழல் மோசடிகள் தொடர்பில் கலைஞர்களிடம் விசாரணை நடத்துவது நகைப்பிற்குரியது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர விமர்சனம் செய்துள்ளார்.

தற்போதைய நாட்களில் ஆணைக்குழுக்களின் விசாரணைகளுக்கு அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு மேலதிகமாக கலைஞர்களும் அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுகின்றது.

கலைஞர்கள், நடனக் கலைஞர்கள் உள்ளிட்டவர்களை அழைத்து என்ன சாப்பிட்டீர்கள், எவ்வளவு பெற்றுக்கொண்டீர்கள் என விசாரணை நடத்தப்படுகின்றது.

விழாக்களுக்கு எவ்வளவு செலவானது என்பது குறித்து ஆவணங்களின் ஊடாக அறிந்து கொள்ள முடியும். அதிகாரிகளிடம் கேளுங்கள்.

இதற்காக தவில் வாத்தியக் கலைஞர்கள், பாடகர்களிடம் விசாரணை நடத்தி கலைஞர்களையும் அரசாங்கத்தையும் இழிவுபடுத்த வேண்டாம். கலைஞர்களின் படைப்புக்களுக்கு வெவ்வேறு விதமான பெறுமதிகள் காணப்படுகின்றன.

இவற்றை அரசாங்கத்தின் அளவுகோல்களைக் கொண்டு மதிப்பீடு செய்ய முடியாது.

இப்படிச் சென்றால் எமது அமரதேவ ஐயாவையும் பாடல் பாடியதற்காக அழைத்து ஆணைக்குழு விசாரணை செய்யும்.

இந்த விசர் வேலைகளை நிறுத்தி, செய்வதனை சரியாகச் செய்யவும் என தயாசிறி கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### அம்மா பிள்ளைகள்

சில பேர் குழந்தைகளிடம் பேசும் போது குழந்தை மாதிரியே பேசுவார்கள். அதாவது மழலை மொழியிலேயே பேசுவார்கள். அப்படிப் பேசினால்தான் குழந்தைக்கு பிடிக்கும்–புரியும்–என்பது இவர்களின் எண்ணம்.

ஆனால் அப்படிப் பேசுவது தவறு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நாம் பேசுவதை பார்த்துத்தானே குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ளும். நாமே குழந்தை மாதிரி பேசிக் கொண்டிருந்தால் அவர்கள் நல்ல விதமாக பேசக் கற்றுக் கொள்வது எப்படி?

இதனால் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் வேகம் தடைப்படும்.

குறித்த 10 குழந்தைகளிடம் உனக்கு அம்மாவைப் பிடிக்குமா? அப்பாவைப் பிடிக்குமா? என்று கேட்டால் அரைவாசிக் குழந்தைகளுக்கு மேல் அம்மாவைப் பிடிக்கும் என்று தான் சொல்லும்.

குழந்தை தாய் வயிற்றில் ஏழு மாதக் குழந்தையாக இருக்கும் போதே அம்மாவின் குரலைக் கேட்குமாம். தாயின் வயிற்றுக்குள் ஒரு சிறிய 'மைக்' வைத்து ஒலிப் பதிவு செய்து பார்த்திருக்கிறார்கள்.

மற்றவர்கள் பேசுவதை விட அம்மா பேசும் குரல் தான் மிகவும் தெளிவாகக் கேட்கிறதாம்.

ஆக ஒரு குழந்தை ஆரம்பத்திலிருந்தே கேட்கும் குரல் அம்மாவின் குரல். அதனால் தான் அம்மா என்றால் ஒரு தனிப்பாசம். தாயின் பேச்சைக் கேட்டுத் தான் வயிற்றில் இருக்கும் குழந்தை பேசக் கற்றுக் கொள்கிறது. பிறக்கும் போதே நமக்கெல்லாம் தாய் மொழிப்பற்று உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் ஒரு குடும்பத்தில் ஆராய்ச்சி நடத்தினார்களாம். பிறந்து நான்கு நாட்கள் ஆவதற்குள் குழந்தை ரஷ்ய மொழியை விட பிரெஞ்சு மொழியை விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

எட்டு வயதுக்கு மேல் புதிதாக கற்றுக் கொள்ளும் எந்த மொழியுமே தாய் மொழியை விட கஷ்டமாகத்தான் இருக்குமாம். ஒருகுழந்தை பிறந்து 8 மாதம் ஆனதுமே நாம் பேசும் பேச்சு புரிய ஆரம்பித்து விடும். அதனால் அதன் பின்னரும் சின்னக் குழந்தை மாதிரி உட்கார்ந்து மழலை மொழி பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

தெளிவாக நல்ல தமிழில் பேசுங்கள். அது புரிந்து கொள்ளும்– கற்றுக் கொள்ளும். அந்த நேரத்திலெல்லாம் நாம் பேசுவதை நாம் பேசுவது மாதிரியே குழந்தை திருப்பிச் சொல்லும். தானே யோசித்துப் பேச 2–3 வருடங்கள் ஆகும்.

ஜான்லாக் என்ற அமெரிக்க விஞ்ஞானி இது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் சொல்கிறார்.

குழந்தை தாயின் வயிற்றில் 7 மாதமாக இருக்கும் பொழுதே பேசக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறது. விரைவாக பேச ஆரம்பிக்கும் குழந்தை புத்திசாலியாக இருக்கும் என்று சிலர் சொல்லுவதுண்டு.

அதுவும் ஒரு பொய்யான நம்பிக்கைதான் என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர்.

பிறந்த குழந்தைக்கு அப்பாவை விட ஏன் அம்மாவைப் பிடித்திருக்கிறது? என்ற கேள்விக்கு இவருடைய ஆராய்ச்சி விடை சொல்கிறது.

அப்பா குழந்தைகளிடம் கெட்ட பெயர் வாங்குவதற்கு வேறு பல காரணங்களும் உண்டு.

ஒரு அப்பா தன் பிள்ளையைப் பார்த்து "உங்கள் கணக்கு வாத்தியார் 'Home work' கொடுத்திருப்பதாக சொன்னாயே... அதற்கு நான் ஏதாவது உதவி செய்யவா? அந்தக் கணக்கை நான் செய்து காட்டவா?" என்று கேட்டார்.

"வேணாமப்பா! நானே அதை தப்பாக போட்டுக் கொள்கிறேன்" என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

47

## அவ்வையார் வேடத்தில் கே. பி. சுந்தராம்பாள்



அவர் மயக்க நிலையில் இருந்த போது மருந்து செலுத் தப்பட்டது.

மரணம்

செப்டெம்பர் 19 ஆம் திகதி அவர் உடல் நிலை மிகவும் மோ சமடைந்தது. அத னால் தேனாம் பேட் டையில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

டாக்டர்கள் எவ்வளவோ முயன் றும் சுந்தராம்பாளைக் காப்பாற்ற முடியவில்லை. இரவு 9.30 மணி இசையரசி மறைந்தார். அப்போது வ்ளர்ப்பு மகள் ராமதிலகம், மருமகன் ரத்தினசபாபதி, தம்பி கே.பி.கனக சபாபதி ஆகியோர் அருகே இருந் தனர்.

அரசு மரியாதை

அந்த சமயத்தில் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்தார்.

கே.பி.எஸ். தேசிய நடிகை. அவர் உடலை நடிகர் சங்கத்தில் பொது மக் கள் அஞ்சலிக்கு வைக்க வேண்டும். அரச மரியாதையுடன் உடல் தகனம் செய்யப்படும் என்று எம்.ஜி.ஆர். கூறி னார். அதை சுந்தராம்பாள் உறவினர் கள் ஏற்றுக் கொண்டனர்.

அதன்படி நடிகர் சங்கத்துக்கு சுந்தராம்பாள் உடல் கொண்டு போகப் பட்டது.அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர். முதல மைச்சர் எம்.ஜி.ஆர்., கவர்னர் பட் வாரி, அமைச்சர்கள், தி.மு.கழக தலைவர் கருணாநிதி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மற்றும் நடிகர் - நடிகைகள், பிரமுகர்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர். அன்று மாலை நடந்த இறுதி ஊர்வலத்தில் பெருந்திர ளாக மக்கள் கலந்து கொண்டனர். உடல் க்ண்ணம்மாபேட்டை மயா னத்தில் தகனம் செய்யப்பட்டது. சிதைக்கு சுந்தராம்பாளின் தம்பி கே.பி.கனகசபாபதி தீ மூட்டினார்.

இசை வெள்ளம்

சுந்தராம்பாள் நாடக மேடைகளி லும் சினிமா படங்களிலும் தனியாக வும் பாடிய 200 இற்கும் மேற்பட்ட பாடல்கள் இசைத் தட்டுக்களாக வெளிவந்துள்ளன. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய ஞானப்பழத் தைப் பிழிந்து என்ற பாடலையும் தனித்திருந்து வாழும் தவமணியே என்ற பாடலையும் காலத்தால் அழியா வண்ணம் அற்புதமாகப் பாடியுள்ளார் கே.பி.எஸ்.

தேசியவாதியான அவர் பண்டிதர் மோதிலால் நேரு இறந்தபோது



கே.பி.சுந்தராம்பாளுடன் வடஇந்திய இசைக்குயில் லதா மங்கேஷ்கர்

பண்டித மோதிலால் நேருவைப் பறி கொடுத்தோமே என்ற பாட லையும் கஸ்தூரி பாய் காலமான போது உன்னை மறந்திடப்போமா என்ற பாடலையும் காந்தி மறைந்த போது உத்தமராம் காந்தியை என்ற பாடலையும் தனி இசைத்தட்டாக உள்ளம் உருக பாடினார்.

காந்தி சந்திப்பு

மகாத்மா காந்தியை சுந்தராம்பாள் இரண்டு முறை சந்தித்து இருக்கிறார். 1937 இல் காந்தி ஈரோடு வட்டாரத் தில் சுற்றுப்பயணம் செய்தார்.

அப்போது சத்திய மூர்த்தியின் ஏற்பாட்டின் படி கொடு முடியில் உள்ள கே.பி.எஸ். வீட்டில் உண வருந்தினார்.

மகாத்மாவுக்கு ஒரு தங்கத்தட்டில் உணவு பரிமாறினார் கே.பி.எஸ்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 315

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

நாம் அவர்களுக்கு எல்லாவற்றை யும் ஒரு குறிக்கோளை நோக்கியே இருக்குமாறு செய்து வைத்து விட்டோம். இவை அனைத்தும் முற்றிலும் அபத்தமானவை.

இவையெல்லாவற்றையும் நாம் அவர்களுக்குச் செய்து விட்ட படியால் முதலில் அவற்றைத் திருப்புவதற்குக் கடினமாக உழைக்க வேண்டும். மிகவும் தெளிவாக இருங்கள். நான் உங்களுக்குச் செய்வது எல்லாம் திரும்புவதற்காகத் தான் நான் தொடர்ந்து திரும்பி செய்து கொண்டி ருக்கிறேன். ஏற்கனவே உங்களுக்கு எவ்வளவு செய்யப்பட்டு விட்டது என் பதைக் கற்பனை பண்ணிப்பாருங்கள். தலைமுறை தலைமுறையாக மக்கள் தங்கள் கருத்துக்களை உங்களிடம் திணித்துக்கொண்டே இருக்கிறார்கள். நான் அவற்றையெல்லாம் முதலில் திருப்பி விட்டு பிறகு நீங்கள் மலர்வதற் கான ஒரு வெற்றிடத்தை உங்களுக்குள் உருவாக்க வேண்டும்.

நான் மக்களிடம் அவர்கள் தொடர்ந்து நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் போய் விட்டு திரும்பி வந்து என்னிடம் சொல் கிறார்கள் ஸ்வாமிஜி இப்பொழு தெல்லாம் நான் கார் ஓட்டுநர்களுக்கும் வீட்டில் வேலைக்காரர்களுக்கும் நன்றி சொல்கிறேன் என்று. மிகவும் தெளி வாக இருங்கள். நன்றியுணர்வு உங் கள் இருப்புத்தன்மையாகி விடும் பொழுது நீங்கள் இது போன்ற விட யங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டு இருக்கமாட்டீர்கள்.



எனக்கு ஒரு விடயம் சொல்லுங் கள்... உங்களுக்கு பிரியமான ஒருவரை இழந்து துக்கத்தில் தவிக்கும் பொழுது உங்களுடைய துக்கத்தை வார்த்தைகளாகக் கொண்டு வருவீர்களா? உங்களுடைய துக்கத்தை வார்த்தை களாகக் கொண்டு வர முடியுமா? முடி யாது! அது மிகவும் ஆழமாக வேர்கொண்டு விட்ட ஒரு உணர்ச்சி; அது உங்களுடைய இருப்புத்தன்மை யின் ஒரு நிலையாகி விடுகிறது இல்லையா? அதை உணர மட்டுமே முடியும். ஒரு போதும் கூறமுடியாது இல்லையா?

ஆமாம், ஸ்வாமிஜி

அதேபோல், நன்றியுணர்வு உங்க ளுடைய அடிப்படையான இருப்புத் தன்மையாகி விடும் பொழுது, அது வெறுமனே உங்களுடைய நிலையாகி விடும். அதைக் கூறிக்கொண்டிருக்க மாட்டீர்கள். அதை உங்க ளால் ஒருபோதும் கூற வும் முடியாது. ஆனால் சமூக காரணங்களுக்காக நன்றி சொல்வது சரிதான். ஏனெனில் நீங்கள் வெளிப் படுத்தாவிட்டால், அது மற்றவருடைய காதுகளை எட்டாது.

ஆனால் நான் சொல்ல வருவது என்னவென்றால், நாம் மனதின் நன்றி யுணர்விலிருந்து, இருப்புத்தன்மையின் நன்றியுணர்விற்கு நகர்ந்து விட வேண் டும். நாம் பேசிக்கொண்டிருக்கும் நன்றி யுணர்வை, உங்களால் ஒருபோதும் வெளிப்படுத்த முடியாது. ஏனெனில் அது மிகவும் ஆழமானது.

மக்கள் என்னிடம் அடிக்கடி சொல் கிறார்கள், ஸ்வாமிஜி உங்களுடன் இணைந்த பிறகு எங்கள் வாழ்வில் நடந்த பல விடயங்களுக்கு நாங்கள் உங்களிடம் மிகவும் நன்றியுணர்வுடன் இருக்கிறோம்.

நான் சொல்கிறேன் சமூகப் பண் பாட்டின் காரணமாக நீங்கள் எதற்காக வாவது ஒருவருக்கு நன்றி சொல்லலாம். ஆனால் நன்றியுணர்வு என்பது ஒருவரை நோக்கியது அல்ல. நீங்கள் பெற்றுக் கொண்ட எதற்காகவாவது ஒருவரை நோக்கிய நன்றியுணர்வுடன் இருந் தால் அது வெறுமனே மனதின் நன்றியுணர்வுதான்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# மின்குமிழ் இழையைப் பயன்படுத்தி போலியான தங்க நகைகள் தயாரிப்பு

## 12 இலட்சம் ரூபாவுக்கு அரச வங்கியில் அடகு

(கொழும்பு)

**மின்குமிழ் இழையைப் பயன்படுத்தி போலியான தங்க ஆபரணங்கள் செய்து அரச வங்கி ஒன்றில் அடகு வைத்த நபர் ஒருவர் மொரட்டுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

ஏற்கெனவே போலி நகைகளை அடகு வைத்து 12 இலட்சம் ரூபா வங்கியிலிருந்து இந் நபரால் பெற பட்டுள்ளது. 37 வயதுடைய கெல னிய பகுதியைச் சேர்ந்த பிரஸ்தாப நபர்வேறுசிலநபர்களுடன இணைந்து குறிப்பிடத்தக்களவு காலம் வரை இந்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார்.

கத்துபெத்த, மிரிகான, கொழும்பு, கிராண்ட்பாஸ், பூகொட மற்றும் அவிசாவளை ஆகிய இடங்களின் அரச வங்கியிலிருந்து மேற்படி போலி நகைகள் சில மீட்கப்பட்டுள் ளன.

மொரட்டுவ பகுதியிலுள்ள அரச வங்கி ஒன்றின் முகாமையாளரி டமிருந்து பொலிஸாருக்கு வழங் கப்பட்ட தகவலின் அடிப்படையில் அடகு வைப்பதற்குக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை நகை களுடன் குறித்த நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

மேற்படி சட்டவிரோத செயற் பாட்டுடன் சம்பந்தப்பட்ட ஏனை யவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸ் குழு ஒன்று களத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வு பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (3)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச சட்ட ஆலோசனை



(கொழும்பு)

சட்டமும் நீதியும் நிறைந்த ஒரு சமூகத்தை நோக்கி எனும் கருப் பொருளில் இலங்கை சட்டத்தர ணிகள் சங்கம் நீதியமைச்சு மற் றும் சட்ட உதவி ஆணைக்குழு என்பவற்றுடன் இணைந்து எதிர் வரும் 23 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை தேசிய சட்ட வாரம் நிகழ்வை நடத்தவுள்ள

மேற்படி தேசிய சட்ட வார நிக ழ்வு பொதுமக்கள் தமக்குள்ள சட்டப் பிரச்சினைகள் மற்றும் உரிமை கள் தொடர்பாக அறிந்து கொள்வ தற்கு உதவும் என சட்டத்தரணிகள் சங்க தலைவர் யு.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸார் சட்ட விரோ தமான முறையில் பொது மக்களை நடத்துவது தொடர்பாக அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

குறிப்பாக் குறைந்த வருமானம் பெறும் பொது மக்களே இவ்வாறான சடப் பிரச்சினைகளை எதிர் கொளள நேரிடுகிறது.

மேற்படி சட்ட விழிப்புணர்வூ ட்டல் நிகழ்வு நாடு பூராகவும் 55 இடங்களில் நடைபெறவுள்ளது.

இதேவேளை மேற்படி சட்ட உதவி தேவைப்படுவோர் எதிர் வரும 13 ஆம் திகதிக்கு முன்ன தாக 011 313 3864 அல்லது 011 313 3862 ஆகிய தொலைபேசி இலக்கங்களு டன் தொடர்பு கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது.

மேற்படி தேசிய சட்டவாரம் தொடர்பாக நடைபெற்ற செய்தி யாளர் மாநாட்டில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்களுள் ஒருவரான ஜி. அழக ரட்ணமும் கலந்து கொண்டா என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய சட்டவாரம் மேற்படி தினங்களில் மட்டக்களப்பிலும் நடைபெறவுள்ளதுடன் முதற்கட்ட மாக 5 இடங்களில் இந்த விழிப் புணர்வு செயற்பாடு முன்னெடுக்கப் படவுள்ளது. இதுதொடர்பானகண்காட்சி யும் இடம்பெறவுள்ளது. பிரதமர் மற்றும் நீதியரசர் ஆகியோரின் அனுசர ணையுடன் இந்த விழிப்பு ணர்வு செயற்பாடு முன்னெடுக்கப் பட்டுள்ளது. (3)

## 5000 போலி டாக்டர்கள்

(கொழும்பு)

போலி வைத்தியர்கள் மீது சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அரச மருத்துவர் சங்கம் குற்றம் சாட்டியு ள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன சுகாதார அமைச்சராக இரு ந்த போது போலி டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக அறிவு றுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் நவீன் சொய்சா கருத்துத் தெரிவிக்கும் போது அரச மருத்துவர் சங்கம் பல சிபார்சு களை முன்வைத்திருந்தது. அவற்றில் ஒன்று கூட அமுல்படுத்தப்படவில்லை.

போலி டாக்டர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டவும், போலி டாக்டர்களை 5 வருடங்கள் சிறையில டைக்கவும் சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு இணங்கியிருந்தது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

5 மாகாணங்களில் நடத்தபபட்ட ஆய்வில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி டாக்டர்கள் செயற்பட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள் ளார். (3)

## சோபித தேரருக்கு ஆசிவேண்டி பிரார்த்தனை


(கொழும்பு)

கொழும்பு கோட்டை ஸ்ரீ நாக விகாரையின் பிரதம பிக்குவான வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித தேரருக்கு ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் விரைவில் குணமடைந்து வரும் நிலையில் அவருக்கு ஆசி வேண்டி இந்த விசேட பிரார்த்தனை நடைபெற வுள்ளது. (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 538

சர்மி சர்மிலா




கருணாகர்



இபா ராஜ்



அமெரிக்காவில் படிச்சிருப்பாங்க போல

சேவராஜா



ஏழை உழைப்பதற்காக நடக்கிறான் பணக்காரன் இளைப்பதற்காக நடக்கிறான்.

ஜாக்ஷன்




பாலா பாலேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சுவிஸில் சிறந்த மாணவராக ஈழத்தமிழ் மாணவன் தெரிவு

சுவிட்சர்லாந்தின் தலைநகர் பேர்ணில் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில், இந்த ஆண்டின் சிறந்த மாணவராக, ஈழத்தமிழ் மாணவனான அருளானந்தம் மரிய அனோஜ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பேர்ணில் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களில் இருந்து ஆண்டுதோறும் சிறந்த மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது வழக்கம்.

மாணவர்களின் கல்விச் செயற்பாடு, புறக்கிருத்திய நடவடிக்கைகள். அனைத்துக்கும் மேலாக நற்பழக்க வழக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தெரிவு இடம்பெற்று வருகின்றது.

பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் பெயர்கள் கல்வித் திணைக் களத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும்.

தெரிவுக்குழுப் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்குத் தெரியாமலேயே பாடசாலைகளுக்கு வருகை தந்து, அவதானங்களை மேற்கொண்டு அந்த விபரங்களை அடிப்படையாக வைத்தே இறுதி முடிவை எட்டுவார்கள்.

அத்தகைய தெரிவில் தமிழரான செல்வன் அருளானந்தம் மரிய அனோஜ் 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டு புலம்பெயர் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

பேர்ண் - பெத்லகேமில் வசிக்கும் அருளானந்தம் (வின்சன்) சந்திரவதனா தம்பதிகளின் ஏக புதல்வனான மரிய அனோஜ் சுவிஸ் நாட்டிலேயே பிறந்தவர் என்பதுவும், வெளிநாட்டுப் பிள்ளைகள் அதிகமாக வாழும் பிராந்தியத்தில் வசிப்பவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

சுவிட்சர்லாந்து பல்கலைக் கழகம் ஒன்று வெளியிட்டுள்ள ஆய்வில் சுவிஸில் வாழும் 148 பிறநாட்டு இனங்களுள் முதன்மை பெற்ற இனமாக தமிழ் இனம் விளங்குவதாகவும், இன்னும் ஒரு தசாப்த காலத்தில் நாட்டின் உயர் பதவிகளில் 35 வீதமானவற்றை தமிழ் இளையோரே வகிப்பர் எனவும் எதிர்வு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 05.11.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 139.04 | 143.60 |
| பவுண்ட் | பிரிட்டன் | 212.98 | 221.62 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 150.07 | 156.90 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.94 | 145.52 |
| டொலர் . | கனடா | 104.89 | 109.79 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.34 | 103.51 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.63 | 102.94 |
| யென் | ஜப்பான் | 1.1386 | 1.1897 |

### மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 374.4931 |
| குவைத் | டினார் | 466.2408 |
| ஓமான் | ரியால் | 366.9159 |
| கட்டார் | ரியால் | 38.8174 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.6796 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.4649 |

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 400 | 300 | 350 |
| தக்காளி | 160 | 140 | 120 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 120 | 120 | 80 | 120 | 90 |
| கரட் | 140 | 80 | 60-180 | 160 | 80 |
| பூசணி | 60 | 50 | 50 | 80 | 40 |
| புடோல் | 100 | 80 | 140 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 110-140 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 150 | 110-160 | 180 | 160 | 140 |
| பாகற்காய் | 160 | 200 | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 160 | 110-140 | 150 | 200 | 140 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 30 | 40 | 80 | 50 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 160 | 80-100 | 150 | 200 | 180 |
| போஞ்சி | 240 | 220 | 220 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50. | - | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | - | - | - | - |
| வெங்காயப்பூ | 200 | - | 140 | - | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 50 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 35 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமர் ஆனார்

28



பண்டார நாயகாவை சுட்ட சோமராம தேரா

**லண்டனில் படித்தவர்**

பண்டார நாயக்க இறந்த போது வயது 60. அவர் 1899 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பிறந்தார்.லண்டனுக்கு போய் சட்டம் படித்தார். சட்டத்தரணியாகப் பணிபுரிந்தார்.

1927 இல் அரசியலில் ஈடுபட்டார். 1931 இல் இருந்து இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். 1936 ஆம் ஆண்டு முதல் பல்வேறு மந்திரி சபைகளில் மந்திரியாக இருந்து வந்தார்.

பண்டாரநாயக்கவின் மனைவி சிறிமாவோ, பிற்காலத்தில் பிரதமராகி "உலகின் முதல் பெண் பிரதமர்" என்று புகழ் பெற்றவர்.

மகள் சந்திரிகா இலங்கை பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பதவிக்கு வந்தவர்.

இலங்கை வரலாற்றில் முக்கிய இடம்பெற்றது பண்டாரநாயக்கவின் குடும்பம்.

**சுட்டவன் யார்?**

பண்டாரநாயக்கவைச் சுட்டுக் கொன்றவனிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவன் பெயர் சோமராமதேரா

பண்டாரநாயக்க தேர்தலில் நின்ற போது அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்தவன்.

**தூக்குத் தண்டனை**

பண்டாரநாயக்கவைச் சுட்டுக் கொன்ற சோமராம தேரா மீது வழக்கு தொடரப்பட்டது.

இலங்கையில் தூக்குத் தண்டனை விதிப்பதை பண்டார நாயக்க ஏற்கனவே இரத்து செய்திருந்தார். பண்டார நாயக்கவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டார நாயக்க மீண்டும் தூக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

சோமராம தேராவுக்கு நீதிமன்றில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்படி அவன் தூக்கில் போடப்பட்டான்.

பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரதமரான தகநாயகே ஆட்சி 6 மாதம் மட்டுமே நீடித்தது.


கட்சிக்குள் மோதல் ஏற்பட்டதால் ஆட்சி கவிழ்ந்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தலுக்கு உத்தரவிட்டது.

**சிறிமாவோ பண்டார நாயக்க**

பண்டாரநாயக்க கொல்லப்பட்டதால் அவருடைய "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி" க்கு ஆதரவாக நாடு முழுவதும் அனுதாப அலை வீசியது. 1960இல் நடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகத்தான வெற்றி பெற்றது.

பண்டாரநாயக்கவின் மனைவி சிறிமாவோ பண்டார நாயக்க, பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையுடன் 1960 ஜூலை 21 ஆம் திகதி பதவி ஏற்றார்.

இவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. எனவே இலங்கை மேல் சபை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.



பண்டாரநாயகா - சிறிமாவோ திருமணத்தின்போது எடுத்த படம். (3-10-1940)

**சிங்களம்தான் ஆட்சி மொழி**

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் மிக முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1961 ஜனவரி முதலாம் திகதி முதல் இலங்கை முழுவதும் சிங்களம் மட்டும்தான் ஆட்சி மொழி என்று அறிவிக்கப்பட்டது. நீதிமன்றங்கள் அனைத்தும் சிங்களத்தில் தான் இயங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

"நாடு முழுவதும் நீங்கள் சிங்களத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தமிழர்கள் வாழும் பகுதிகளில் மட்டும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் அரசாங்க அலுவலக வேலைகளையும் தமிழில் நடத்த அனுமதியுங்கள்'' என்று செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டது. இதை சிங்களக் கட்சிகள் ஏற்கவில்லை. இது குறித்துப் பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை சிங்களக் கட்சிகள் தோற்கடித்தன.

**தமிழர்கள் போராட்டம்**

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டத்தை எதிர்த்து, அகிம்சை வழியில் போராட்டம் நடத்தத் தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. இந்தச் சட்டத்தை எதிர்த்து ஜனவரி 2 ஆம் திகதியன்று தமிழர் பகுதிகளில் முழு அடைப்பு (பந்த்) அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்தது. இதைச் சிங்கள அரசு கண்டுகொள்ளவில்லை. சிங்களத் திணிப்பைத் தீவிரப்படுத்தியது.

பெப்ரவரி 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள அரசு அலுவலகத்தின் முன் செல்வநாயகமும் தமிழரசுக் கட்சியின் தொண்டர்களும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர். எல்லோரும் அமைதியாக உட்கார்ந்து சிங்களச் சட்டத்துக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

**தடியடியில் தமிழர் பலி**

யாழ்ப்பாணத்தில் தொடங்கிய இந்தப் போராட்டம் தமிழர்கள் வாழும் இதர பகுதிகளுக்கும் பரவியது.

திருகோணமலையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாகத் தடியடி நடத்தினார்கள். இதில் படுகாயம் அடைந்த ஏகாம்பரம் என்ற தமிழர் மரணம் அடைந்தார். இதனால் செல்வநாயகம் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார். அகிம்சை போராட்டத்திற்கு அரசாங்கம் பணியமறுப்பதால் சட்ட மறுப்பு போராட்டத்தை தொடங்குவோம் என்று அறிவித்தார். (தொடரும்)

# தமிழ், சிங்கள பாடப்புத்தகங்களில் திருக்குறளை அறிமுகப்படுத்தவும்

## பா.ஜ.க.எம்.பி.தருண் விஜய் வலியுறுத்து

(கொழும்பு)

**திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறளின் அத்தியாயங்களை இலங்கையின் பாடசாலைகளில் தமிழ், சிங்களப் பாடப்புத்தகங்களில் இடம்பெறச் செய்து இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென இலங்கை வந்துள்ள இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தருண் விஜய் தெரிவித்துள்ளார்.**



புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் மற்றும் பா. ஜ.க உறுப்பினர் தருண் விஜய் ஆகியோருக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே தருண் விஜய் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா முழுவதும் அனைத்து மாநிலமொழிகளிலும் திருக்குறள் பாடத்திட்டமாக வருவதற்காக இந்தியப் பாராளுமன்றத்தில் முதன்முதலாக குரல் கொடுத்து அதற்கான ஏற்பாடுகளைஅரசாங்கம் தற்போது செய்துகொண்டிருக்கிறது. மிக விரைவில் எல்லாமொழிகளிலும் திருக்குறள் ஒருபாடத்திட்டமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் திருவள்ளுவருடைய திருக்குறள் அனைத்து மொழிகளிலும் வெளிவந்து இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்தார்.

சந்திப்பில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவிக்கை யில்,

திருவள்ளுவருடைய மகிமையை உலகத்திற்கு பரவுவதற்காக இந்தியாவிலே பல முக்கிய மானவியங்களை தருண்விஜய்செய்திருக்கிறார். இந்தியாவில் திருவள்ளுவருடைய சிலைகள் லோக சபாவிலும் கங்கை நதியின் அருகிலும் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் இருக்கிறார். அதனை செய்து முடிப்பார் என்பதுதான் அவருடையகருத்து.

திருக்குறளின் முக்கியத்துவம் எல்லா மாணவர்களுக்கும். உலகமக்கள் அனைவருக்கும் தெரிய வேண்டும்.

1330 அதிகாரங்களைக் கொண்ட இத் திருக்குறள் ஒருமனிதன் எவ்வாறு வாழ வேண்டும்என்பது தொடர்பாக சகல வழிகளிலும் கூறப்பட்டுள்ளது.

தருண் விஜய் இங்குவந்து இலங்கையிலும் திருவள்ளுவருடைய திருக்குறள் பரவ வேண்டும் என்று குரல் கொடுத்தமைக்கு நன்றி கூறுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## இலங்கை ராணுவத்தின் சினைப்பர் அணியின் முன்னாள் சிப்பாய் மாலைதீவில் கைதானார்

(கொழும்பு)

.இலங்கை இராணுவத்தில் சினைப்பர் தாக்குதல் அணியில் இருந்த, முன்னரள் இராணுவச் சிப்பாய் ஒருவர் மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ளார். மாலைதீவில் உள்ள ஹிபிஹாட்டு தீவில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட நிலையில், இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில், துப்பாக்கிகள், குறிபார்த்துச் சுடும் துப்பாக்கிக்குரிய ரவைகளும் அடங்கியுள்ளன.

இந்த நிலையில், இராணுவத்தின் குறிபார்த்துச் சுடும் (சினைப்பர்) அணியில் இடம்பெற்றிருந்த, முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் மாலைதீவு விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாலைதீவை விட்டு வெளியேற முயன்ற போது கடந்தவாரம் கைது செய்யப்பட்டுள்ளார். சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாலைதீவு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.எனினும் இது தொடர்பான தகவல்களை மாலைதீவு அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை.

கடந்த செப்டெம்பர் மாதம் மாலைதீவு ஜனாதிபதி பயணம் செய்த படகில் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அதையடுத்து, மாலைதீவு ஜனாதிபதியை கொல்ல முயன்ற குற்றச்சாட்டில், அந்த நாட்டின் துணை ஜனாதிபதி அகமட் அதீப் கைது செய்யப்பட்டார்.

அவரது கூட்டாளியான , 18 வயதுடைய இளைஞர் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டு மாலைதீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

இந்தப் பின்னணியில், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த முன்னாள் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏற்புடைய சூழல் தற்போது இலங்கையில் நிலவுகின்றது

(கொழும்பு)

இலங்கையில் தற்போது இலகு நிபந்தனை பொருளாதார முறைமை காணப்படுவதுடன் வெளிநாட்டு முதலீடுகளுக்கான வசதிகள் வழங்கும் முறைமையொன்றும் காணப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் பாங்கொக் நகரில் இடம்பெற்ற இலங்கை தாய்லாந்து வியாபார சம்மேளன மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையே தற்போதுள்ள முதலீட்டு முறைகளை சிறப்பாக இனங்காண வேண்டியதுடன் அவற்றுள் பிரதானமாக விவசாய உற்பத்திகள், சுற்றுலா த்துறை மேம்பாடு என்பன உள்ளடக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டினார்.

நிலையான அபிவிருத்திக்கு உறுதியான வேலைத் திட்டமொன்று காணப்பட வேண்டியதுடன் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய சந்தை வழிநடத்தப்பட வேண்டுமென்று தாய்லாந்தின் துணைப் பிரதமர் தெரிவித்தார்.

அவ்வாறே நிலையான அபிவருத்தியை இருநாடுகளும் இணைந்து வெற்றியடைச் செய்ய வேண்டும் எனவும் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் இலங்கை மற்றும் தாய்லாந்து வர்த்தகர்கள் சிலர் கலந்து கொண்டதுடன் தாய்- இலங்கை வியாபார சங்கத்தினால் ஜனாதிபதிக்கு நினைவுச்சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இதனோடு இணைந்ததாக தாய்லாந்து வியாபாரிகள் சிலரும் ஜனாதிபதியுடன் கல ந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதன்போது இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தம் நோக்கில் இலங்கையில் ஹோட்டல்கள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மீன்பிடி மற்றும் சீனிக் கைத் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தாய்லாந்து வர்த்தகர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அத்தோடுமோட்டார்வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதில் அவர்கள் தமது பங்களிப்பினை வழங்குவதாகவும் இதன் போது தெரிவித்தனர்.

இங்கு தென்மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயா கமகே ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர். இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட சமாதி புத்தரின் மாதிரி உருவச்சிலையொன்றும் தாய்லாந்தின் அவுத்தியா பிரதேசத்தில் அமைந்துள்ள தம்மளான் விகாரையில் நிறுவும் நிகழ்வும் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. (இ-7-10)



மன்ப உல் உலூம் பாலர் பாடசாலை சிறார்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இக் கண்காட்சியில் கலந்து கொண்டு 1,2,3 ஆம் இடத்தை பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டதோடு கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளன தலைவர் ஏ.எச்.கெமால் முகதீன், வடமாகாண முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.ஜெகதாரணி, ஜே/86 கிராம அலுவலர் த.அருந்தமிழ் செல்வன், ஜே/82 கிராம அலுவலர் யோன் பிள்ளை பத்திநாதன் பாடசாலையின் தலைமை ஆசிரியை சி.கஸ்தூரி, வை.ஜிந்துஜா மற்றும் ஏ.பாத்திமா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகர்)

## மின்சார சபையில் 2,367 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையில் சேவையாற்றும் மேன் பவர் கம்பனியின் 5988 தற்காலிக ஊழியர்களில் தகைமையுடைய 2367 பேரை ஜனவரி மாதம் முதல் இலங்கை மின்சார சபையின் நிரந்தர ஊழியர்களாக இணைத்துக் கொள்ளவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

மீதமுள்ள ஊழியர்களுக்கு பயிற்சியின் பின்னர் தகைமை பெற்றவுடன் நிரந்த ஊழியர்களாக இணைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)




# மண்மூட்டைகளும் தங்கத்துகள்களும்

'இறைவனின் தேசம்' என்று புகழப்படும் நேபாளத்தில், மக்கள் இடையே நிறைய வகுப்புகளும், சாதிகளும் உண்டு. அதில் ஒன்றுதான் நெவார் வகுப்பினர். கடுமையான உழைப்பாளிகள். மர வேலைபபாட்டுக்குப் பெயர் பெற்றவர்கள். இவர்களுக்கென்றே தனியாக நாட்காட்டி உண்டு. அது பற்றி சுவாரஸ்யமான கதையும் உண்டு.

அந்தக்காலத்தில், நேபாள நாடு பல்வேறு அரசர்களால் ஆளப்படும் சின்னச் சின்ன சமஸ்தானங்களாக இருந்தது. அவற்றில் ஒன்று, பக்தபூர். காத்மண்டுவில் இருந்து சற்று அருகில் இருக்கும் பக்தபூர் அரசருக்கு, முனிவர் மூலம் ஓர் அதிசய இரகசியம் தெரியவந்தது.

காந்திபூர் பகுதியில் 'லாக்' எனும் புனிதக் குளம் உள்ளது. அந்தக் குளத்தில் இருந்து, குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சேகரிக்கப்படும் மண், அடுத்த நாள் பொன்னாக மாறிவிடும் என்பதே அந்த இரகசியம்.

இதை அறிந்துகொண்ட அரசர், அந்தக் குறிப்பிட்ட நாளில் சில சேவகர்களை அழைத்தார். "அந்த லாக் ஏரிக்குச் செல்லுங்கள். நான் குறிப்பிடும் நேரத்தில் அங்கே இருந்து மண்ணைத் தோண்டி எடுத்து வாருங்கள்" என்று கட்டளை இட்டார்.

ஏன், எதற்கு என சேவகர்கள் கேட்கவில்லை. கேட்கத்தான் முடியுமா? அரசர் கட்டளையை நிறைவேற்றுவதுதானே சேவகர்கள் கடமை. உடனே கிளம்பினார்கள். தாம் சேகரித்த மண் மூட்டைகளுடன் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். வழியில், நெவார் வகுப்பைச் சேர்ந்த சக்வால் என்பவர் குடியிருந்தார்.

"என்ன எடுத்துச் செல்கிறீர்கள்?" என்று எதேச்சையாகக் கேட்டார்.

"லாக்குளத்து மண்ணை மன்னர் சேகரித்து வரச் சொன்னார்" என்றான் ஒரு சேவகன்.



புத்திக்கூர்மையான சக்வாலுக்கு சந்தேகம் உண்டானது. இதில்ஏதோ விடயம் இருக்க வேண்டும் என நினைத்தார்.

"உங்களைப் பார்த்தால் மிகவும் களைப்பாக இருக்கிறீர்கள். அரசரின் சேவகர்களான உங்களுக்கு உணவு கொடுப்பது என் பாக்கியம். எல்லோரும் சாப்பிட்டு விட்டுச் செல்ல வேண்டும்" என்றார்.

சேவகர்கள் வயிறாரச் சாப்பிட்ட பிறகு, "சேவகர்களே, எனக்கு ஓர் ஆசை. நீங்கள் கொண்டுவந்த மண் மூட்டைகளை எனக்குக் கொடுக்கிறீர்களா? அரண்மனைச் சேவகர்களுக்கு விருந்து கொடுத்தன் நினைவாக, இதை வைத்துக் கொள்வேன். பின்னாளில், என் மகனிடமும் பேரன்களிடமும் காட்டி மகிழ்வேன்" என்றார்.

உணவு அளித்த ஒருவர், ஒரு வேண்டுகோள் வைக்கும்போது தட்ட முடியுமா? இது மண்தானே. மறுபடியும் லாக் குளத்துக்குச்சென்று எடுத்துக்கொண்டால்போயிற்று என நினைத்த சேவகர்கள், ஒப்புக் கொண்டனர். மீண்டும் லாக் குளதுக்குச்சென்று மண்ணைச் சேகரித்துக் கொண்டு அரண்மனை திரும்பினார்கள்.

சேவகர்கள் வைத்துவிட்டுச் சென்ற மண் மூட்டைகளை அடுத்த நாள் பிரித்தார் சக்வால். அவை, தகதகவென ஒளிர்ந்தன. எல்லாமே தங்கத் துகள்கள். ஆனந்த அதிர்ச்சி சக்வாலுக்கு. மகிழ்ச்சியில் 'ம பூஜா' செய்து கொண்டார். நேபாள மொழியில் 'ம' என்றால், 'நான்' என்று பொருள். இந்தச் சுய வழிபாட்டை 'ம பூஜா' என்று குறிப்பிடுவர்.

அதே நேரம், அரண்மனையில் அரசர் ஆவலோடு மண் மூட்டைகளைப் பிரித்தார். அவை, மண்ணாகவே இருப்பதைக் கண்டு அதிர்ந்தார். சேவகர்களை அழைத்தார். உண்மையைச் சொல்லுங்கள். நான் சொன்ன நேரத்தில் மண்ணை எடுத்தீர்களா? ஆம் என்றால், அது எங்கே? இல்லை என்றால், அரசரின் கட்டளையைச் சரியாகச் செய்யாத உங்களுக்கு மரண தண்டனைதான்" என்றார் சீற்றமாக.

சேவகர்கள் பயந்துவிட்டனர். நடந்த விடயத்தைச் சொன்னார்கள். இதைக் கேட்ட அரசர், என்ன செய்வது எனப் புரியாமல் திகைத்தார்.

'சக்வாலைப் பகிரங்கமாக அழைத்து விசாரித்தால், அந்த இரகசியம் எல்லோருக்கும் தெரிந்துவிடும். இரகசியமாக அழைத்து தண்டித்தால், அவனது குடும்பமும் உறவுகளும் மக்களிடம் சொல்வார்கள். தனக்கு கெட்ட பெயர் உண்டாகும். என்ன செய்வது?' எனத் தடுமாறினார்.

அப்போது, சக்வால் வந்திருப்பதாக ஒரு சேவகன் வந்து சொன்னான். உடனே அவரை சந்திக்கச் சென்றார் மன்னர்.

"அரசே வணக்கம். இந்த நேரம் இங்கே என்ன நடந்திருக்கும் என என்னால் யூகிக்க முடிகிறது. எதற்காக மண்ணைக் கொண்டுவரச் சொன்னீர்கள் என்பதை அறியும் ஆவலில்தான் இப்படிச் செய்தேன். வேறு எந்த நோக்கமும் இல்லை. இந்த சமஸ்தானம் நிறையக் கடனில் இருப்பதும் தெரியும். அரசரின் பிரச்சினையைத் தீர்ப்பது குடிமகனின் கடமை. தங்கத் துகள் மூட்டைகளைக் கொடுத்துவிடுகிறேன். ஆனால், ஒரு வேண்டுகோள். எங்களின் நெவாரி வகுப்பினருக்காக ஒரு நாடகாட்டியைத் தொடங்க ஒப்புக் கொள்ள வேண்டும்" என்றார் சக்வால்.

கடன் சுமையால் கலங்கி நின்றிருந்த அரசருக்கு சக்வாலின் புத்திக் கூர்மையும் நாட்டுப்பற்றும் பிடித்திருந்தது. எனவே, ஒப்புக்கொண்டார். அவரை வணங்கி விட்டு, தங்கத் துகள் மூட்டைகளைக் கொடுத்துவிட்டு மகிழ்ச்சியுடன் கிளம்பினார் சக்வால்.

11.2015
06

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1632 - முப்பதாண்டுப் போரில் சுவீடனின் பேரரசன் குஸ்டாவஸ் அடொல்பஸ் கொல்லப்பட்டான்.

1759 - பாளையக்காரர் பூலித்தேவரின் நெற்கட்டான் செவ்வலைக் கோட்டையை இசபல்கான் கான்சாகிப் என்பவனின் படைகள் வெடிகுண்டுகள் கொண்டு தாக்கின. ஆனாலும் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை.

1844 - டொமினிக்கன் குடியரசின் முதலாவது அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது.

1860 - ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16வது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே குடியரசுக் கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதியானார்..

1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்குத் தலைவரானார்.

1891 - இலங்கை ஸ்டீம்ஷிப் கம்பனிக்குச் சொந்தமான நீராவிக் கப்பல் "லேடி ஹவ்லொக்" முதன் முறையாக கொழும்பு வந்தடைந்தது.

1913 - தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி இந்திய சுரங்கத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டார்.

1918 - போலந்தில் இரண்டாவது போலந்து குடியரசு அமைக்கப்பட்டது.

1935 - எட்வின் ஆம்ஸ்ட்ரோங் பண்பலை ஒலிபரப்பு பற்றிய ஆய்வை வெளியிட்டார்.

1941 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தனது முப்பதாண்டு கால பதவியில் இரண்டாவது தடவையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஜெர்மனியின் தாக்குதலில் 350,000 சோவியத் வீரர்கள் கொல்லப்பட்டிருந்தாலும், ஜெர்மனியர்கள் தமது 4.5 மில்லியன் பேரை இழந்திருப்பதாகவும் சோவியத் வெற்றி கண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

1943 - இந்தியாவின் வங்காளத்தில் "நவகாளி"யில் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக மகாத்மாகாந்தி கொல்கத்தாவில்இருந்து நவகாளிவந்து சேர்ந்தார்.

1943 - இரண்டாம் உலகப் போர்: ரஷ்யா உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றினர். ஜெர்மனியினர் நகரை விட்டு விலகும் போது நகரின் பல பகுதிகளை சேதமாக்கினர்.

1944 - புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது. பின்னர் ஜப்பானில் கொழுத்த மனிதன் அணுகுண்டு போடுவதற்கு இது பயன்பட்டது.

1962 - ஐ.நா.பொதுச்சபை தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

1963 - வியட்நாம் போர்: நவம்பர் 1 இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து, இராணுவத் தலைவர் டோங் வான் மின் தெற்கு வியட்நாமின் ஜனாதிபதியானார்.

1965 - ஐக்கிய அமெரிக்காவுக்கு குடியேற விரும்பிய கியூபா நாட்டினரை விமானம் மூலம் அங்கு கொண்டு செல்ல கியூபாவும் ஐக்கிய அமெரிக்காவும் உடன்பட்டன. இதன்படி 1971 இற்குள் 250,000 கியூபர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

1977 - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 39 பேர் கொல்லப்பட்டனர்.

1985 - கொலம்பியாவில் இடதுசாரி தீவிரவாதிகள் நீதிக் கட்டிடத்தைக் கைப்பற்றி 11 நீதிபதிகள் உட்பட 115 பேரைக் கொன்றனர்.

1999 - அவுஸ்திரேலியர்கள் அனைத்து மக்கள் வாக்கெடுப்பு மூலம் பிரித்தானிய முடியாட்சியின் கீழ தொடர்ந்திருக்க சம்மதம் தெரிவித்தனர.

### பிறப்புக்கள்

1861 - ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்து கண்டுபிடிப்பாளர் (இ. 1939)

1979 - லமார் ஓடம், அமெரிக்க கூடைப்பந்தாட்டக்காரர்

### இறப்புகள்

1893 - பீட்டர் சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (பி. 1840)

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துறைசார் நிபுணர்களின் நிபுணத்துவ சேவை எங்கே?

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட புகையிரத நிலையம் மற்றும் பொதுநூலகம் என்பவற்றின் கட்டிட நிர்மாணம் பற்றி இன்று வரை புகழ்ந்து பேசப்படுவதை நாம் அறிய முடியும்.

இது மட்டுமல்ல அந்தக் காலத்தில் வடபகுதியில் அமைக்கப்பட்ட வைத்தியசாலைகள், கிராம சபைகள் இன்றும் கம்பீரமாக காட்சி தருவதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் கட்டிடம் இன்று இராமநாதன் கட்டிடம் என்ற பெயரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடையாளச் சின்னமாகக் காட்சி தருகிறது.

யாழ்ப்பாணம் என்றால் நல்லூர் கந்தன் ஆலயத்தின் முகப்புத் தோற்றம், யாழ்.பொது நூலகத்தின் முன் அமைப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் கட்டிடம் என்பவற்றால் சான்றுப்படுத்தப்படுகின்றது எனின், அவற்றின் உருவாக்கத்தின் பின்னணியில் இருந்த நிபுணத்துவ சேவையின் கனதி பற்றி அறிய முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தலைமை நிர்வாகம் இயங்குகின்ற இராமநாதன் கட்டிடம் பழைமையாகிவிட்டது. எனவே அதனை உடைத்து அந்த இடத்தில் மீள் கட்டுமானம் செய்ய வேண்டும் என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி போன்றவர்கள் கோரிக்கை விடுத்த காலம் அது.

அப்போது யாழ்.பல்கலைக்கழகத்தின் பதிவாளராக மிகச் சிறந்த நிர்வாகி சிவராசா அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அந்தக் கட்டிடத்தை உடைப்பதா? இல்லையா? என்பதை முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க.துரைராஜா அவர்களே தீர்மானிப்பார் என்று முடிவு செய்யப்பட்டது.

கட்டிடத்தின் சுவரில் துளையிட்டு ஒரு பரிசோதனையை நடத்திய பேராசிரியர் துரைராஜா அவர்கள் இன்னும் 75 வருடத்திற்கு இந்தக் கட்டிடத்தில் எந்தப் பழுதும் ஏற்படாது என்று கூற, அதனால் அந்தக் கட்டிடம் காப்பாற்றப்பட்டது.

சேர் பொன்.இராமநாதனின் அடையாளத்தை இல்லாதொழிப்பதற்காகவே அந்தக் கட்டிடத்தை உடைக்க வேண்டும் என்று சிலர் நினைத்தனர் என்ற விமர்சனம் அப்போது எழுந்ததும் உண்டு.

எதுவாயினும் பேராசிரியர் க.துரைராஜா என்ற உலகப் புகழ்பெற்ற நிபுணர் இருந்தமையால் அந்த உன்னதமான கட்டிடம் காப்பாற்றப்பட்டது.

இனி எவர் நினைத்தாலும் அந்தக் கட்டிடத்தில் கைவைக்க முடியாது என்றளவில் தொல்லியல் சிறப்பு மிக்க கட்டிடமாக அது பெறுமதி பெற்றுள்ளது.

ஆக, ஒரு காலத்தில் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட கட்டுமானங்களில் நிபுணத்துவ சேவை முதன்மை பெற்றிருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை அறவேயில்லை எனலாம். இதற்கு திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டிடம் தக்க சான்றாகும்.

இதுமட்டுமல்ல வீதிகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் என எல்லாமுமே ஏதோ ஒரு வகையில் பலவீனமானவையாக –உரிய நிபுணர்களின் வழிகாட்டல்களில் அமைக்கப்படாதவையாக இருப்பதைக் காணமுடியும்.

இத்தகைய போக்குகள் வடபுலத்தில் ஒழுங்கற்ற கட்டுமானத்தையே உருவாக்கும் என்பதால், இது தொடர்பில் பொறுப்பானவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இது மிகவும் அவசியமானது.

# திருமூலர் உலகிற்கு வழங்கிய சமய, சமூக சிந்தனைகள்

சித்தர் பாரம்பரியத்தின் மூலகர்த்தா திருமூலர் என்றால் அது மிகையாகாது. திருமூலர் காலம் என நோக்கும்போது அறிஞர் இடையே கருத்து வேறுபாடு காணப்பட்டாலும் சிலர் கி.பி. 6ஆம் நூற்றாண்டு என்றும் சிலர் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று கூறினாலும் திருமந்திர காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதல்ல என்று கூறப்பட்டது. இது 10 ஆம் திருமுறை ஆகும். 3000 பாடல்களை உள்ளடக்கிய தமிழாகமம் ஆகும். தத்துவ நூல் மட்டுமல்ல மனிதநேய கருத்துக்கள் மருத்துவ கருத்துக்கள், சமூக தத்துவங்கள் உள்ளடங்கிய பொக்கிசமாகும்.

அடியவருக்கு கொடுப்பதே ஆண்டவனுக்கு சேரும் என்பது திருமூலரின் திடமான நம்பிக்கை. இதை படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்...

என்று விபரித்துள்ளார். அனைவருக்கும் அன்னமளிக்க வேண்டும் என்பதை குறிப்பாக சாதி சமயம் இனம் மொழி பாராது அனைவருக்கும் உணவளிப்பது மனிதநேய உணர்வு ஆகும். காகம் தான் உண்ணும் போது தன் இனத்தை அழைத்து பகிர்ந்துண்பதைக் காணலாம். இதை திருமூலர்

ஆர்க்கும் இடுமின் அவரவர் என்னன்மின்...

இதை பாரதியார் வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் என்றார்.

தருமம் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் இன்பத்தை அனுபவிக்கலாம், அல்லது துன்பம் எம்மைச் சூழ்ந்து கொள்ளும். அது எப்படியான துன்பம் என்பதை

இருமலுஞ் சோகையும் ஈகையும் வெப்புந் தருமஞ் செய்யாதலர் தம்பால தாகும்...

என்றார்.

ஒருதலை சார்பின்றி நடு நிலைமையாக நிற்பவர் இறைவனுக்கு ஒப்பானவர். இது மனிதநேய கருத்தில் முதன்மையானது. எல்லோரும் சமன் எனும் சமநீதி கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது.

நடுவுநின்றார் நல்ல தேவருமாவர்...

பெற்றோரைப் பேணுதல் எல்லோரது தலையாய கடனாகும். தம்மைப் பெற்ற தாய் தந்தையை பேணாதவர்கள் கயவர்கள் எனக் குறிப்பிட்டார். இக்கயவர்கள் திருமூலர் காலத்தில் வாழ்ந்ததை அறியலாம். இதனாலேயே இச்சொல்லைப் பயன்படுத்தினார். பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, கள், காமம், பிறர்மனை நாடல் போன்றன ஐம்பெரும் பாவம் என்பதை திருமூலர் சுட்டிக் காட்டினார். இன்று சமூக போதைப் பயன்பாடு அதிகரித்ததை சமூகம் பொறுக்குதில்லை. அன்று திருமூலர்

கொலையே களவு கட்காமம் பொருட்கூறல்... என்றார்.

தவயோகி திருமூலர் சிவபெருமானை சிவப்பரம் பொருளையே முழுமுதற் கடவுளாகக் கொண்டவர். தன்னை நாள்தோறும் நினைப்பவர் மனதில் இறைவன் அமர்ந்து கொள்வான். இதை கடலுடையான் மலையான் ஐந்து பூதத்து உடலுடையான் பல ஊழி...


கன்மவினைகளே பிறவிக்கு காரணம். எனவே பிறவி நோய் நீக்க இறைவன் திருவருளைப் பெற வேண்டும். அதற்கு சிவ நாமத்தை உச்சரிக்க வேண்டும். சிவசிவ என்று கூறினால் ஆன்மா சிவத்தோடு இணைந்து கொள்ளும். இதை

சிவசிவ என்கிலர் தீவினையாளர் சிவசிவ என்றிட தீவினை மாளும்...

ஒவ்வொரு மனிதனும் சிவசின்னங்களை தரிக்க வேண்டும். இதில் திருநீறு முதன்மையானது. திருநீறு அணிவதால் கிடைக்கும் பலன்பற்றி திருநீற்று பதிகம் கூறுகிறது. மேலும் திருமந்திரம்,

காங்காளன் பூசும் கலசத் திரு நீற்றை மங்காமல் பூசி...

நடராஜர் வடிவமே பஞ்சாட்சர வடிவமாகும். இதில் தூல, சூக்கும காரண பஞ்சாட்சரம் என பலவகைப்படும். சிவாயநம மந்திரம் ஓதினால் இறைவன் நேரடியாக அருள்



செய்வான்.

நம்முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்

அம்முதல் ஐந்தில் அடங்கிய...

குருமுகமாக தெரிந்து கொண்ட ; செய்யவேண்டிய ஆத்மார்த்த பூசையின் இரகசியத்தை பின்வருமாறு திருமந்திரபாடல் கூறுகிறது.

உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம் வள்ளல் பிராணார்க்கு...

இதில் உடம்பு என்பது ஆலயம், உள்ளம் என்பது கர்ப்பக்கிரகம் என்று போற்றப்படுகிறது. இவ் உடம்பான கோயிலில் ஐந்து விளக்காக ஐம்புலன்கள் அணையாத விளக்காக காணப்படுகிறது.

**கு.கோபிராஜ்**
**சண்டிலிப்பாய் வடக்கு.**

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்"

*–மார்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)*

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இறைவனுக்கு அஞ்சுங்கள்

★ ஒருவரை ஒருவர் நிந்தனை செய்தால் வீண்பழி சுமத்தினால் விளைகின்ற பாவம் யார் அந்தச் செயலை முதலாவதாக தொடங்கினாரோ அவரையே சேரும்.

★ ஒருவர் தனது குடும்பத்தை அழகுபடுத்தினால் அவருக்கு சொர்க்கத்தில் மேல்பகுதியில்(உயரத்தில்) ஒரு இல்லம் கட்டித் தரப்படும்.

★ இறைவனிடம் மிகவும் கோபத்திற்குரியவர்கள் வீண்தர்க்கம் செய்வதில் திறமைசாலிகள்.

★ எவரேனும் சரி உன்னிடமுள்ள குறைகளைச் சொல்லி உன்னைத் திட்டினால் நீ அவனுடைய குறைகளைச் சொல்லி திட்டாதே! காரணம் அந்தப் பாவம் அவனையே சேரும்.

★ எவன் அல்லாஹ்வுக்கு பயப்படவில்லையோ அவனை எல்லாவற்றிற்கும் அல்லாஹ் பயப்படும்படி செய்து விடுவான்.

★ அறிவுகளுக்குத் தலைமையானது இறையச்சம். இறையச்சத்தின் உதவியினாலேயே சகல ஞானங்களும் உண்டாகின்றன.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### தெய்வீகம், ஒரே கொண்டாட்டம்

புத்தாண்டை ஒரு ஏழை ஆண்டுக்கொரு முறை கொண்டாடுகிறான். ஆனால் செல்வந்தன் தினமும் கொண்டாடுகிறான்.

பெரும் செல்வந்தன்ஒவ்வொரு கணமும் கொண்டாடுகிறான்.

நீங்கள் எத்தகைய செல்வந்தர்? ஆண்டுக்கொரு முறை கொண்டாடுகிறீர்களா? மாதம் ஒருமுறையா? ஒவ்வொரு நாளுமா? ஒவ்வொரு கணமும் கொண்டாடுகிறீர்கள் என்றால் நீங்கள்தான் படைப்பின் தலைவன்.

புத்தாண்டைக் கொண்டாடும்போது கடந்து வந்த ஆண்டை மறு ஆய்வு செய்யுங்கள். இதுவே உங்கள் வீட்டுப்பாடம். நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் சாதித்தது என்ன, கடந்த ஆண்டில் நீங்கள் எந்த அளவுக்குப் பயனுள்ளவராக இருந்தீர்கள்?

ஒரு மணிநேரம் உட்காருங்கள். ஒவ்வொரு வாரத்தைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். வாரத்திற்கு ஒரு நிமிடம் என்று ஒரு மணி நேரத்திற்குள்ளாக அந்த ஆண்டில் நீங்கள் கண்ட வளர்ச்சிகளை எல்லாம் பாருங்கள். புத்தாண்டு தினத்தில் ஒரு மலர் எடுத்து ஆண்டு முழுவதையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்.


குறிப்பு: நறுமணத்தைப் பரப்புதல்

சத்சங்கத்தின்போது ஸ்ரீஸ்ரீ அவர்கள் அழகிய காகிதத்தில் சுற்றப்பட்டிருந்த ஒரு பரிசுப்பொருளை - மல்லிகை வாசனைத்திரவியம் கொண்ட ஒரு சிறிய குப்பியைத் திறந்தார். மூடியைத் திருகித் திறந்து அந்த நறுமணத்தை நுகர்ந்தார். பிறகு ஒரு நாளில் அந்த வாசனைத் திரவியத்தை சிறிதே ஊற்றி அக் கூடத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் நறுமணம் பரவுமாறு அத் துண்டுத் தாளைக் காற்றில் அசைத்தார். எல்லோரும் அப்போது நறுமணத்தை நுகர்ந்து மகிழ முடிந்தது.

நறுமணத்தைப் பெற்றிருந்தால் மட்டுமே போதாது. அதைப் பரப்பவும் நாம் தெரிந்திருக்க வேண்டும் என்று குருஜீ விளக்கினார். மலர்களிடம் நறுமணம் இருக்கிறது. ஆனால் அதை எங்கும் பரப்புவது காற்றுதான். அதேபோல் நாம் எல்லோரும் ஆழ்மனதில் அற்புதமானவர்கள், அழகானவர்கள், அரவணைப்பும் அன்பும் உள்ளவர்கள். ஆனால் நறுமணத்தை எப்படிப் பரப்புவது என்று நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அனைவரிடமுள்ள இந்த நறுமணத்தைப் பரவச் செய்யும் காற்றுதான், சத்சங்கம்.

# இந்தியன் பிறமியர் லீக் காற்பந்து; புனே அணியை வீழ்த்தியது கேரளா






ஐ.எஸ்.எல். காற்பந்து தொடரில், கொச்சி ஜவகர்லால் நேரு மைதானத்தில்நேற்று முன்தினம்நடைபெற்ற லீக் ஆட்டத்தில் புனே சிட்டி அணியை கேரளா பிளாஸ்டர்ஸ் அணி எதிர் கொண்டது.

புள்ளி பட்டியலில் கடைசி இடத்தில் இருந்ததால் வெற்றி பெற வேண்டிய நெருக்கடியுடன் கேரள அணி களமிறங்கியது. எனவே, உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் துவக்கம் முதலே ஆக்ரோஷமாக விளையாடினர். அதேசமயம் முதலிடத்தில் இருக்கும் புனே அணி வீரர்களும் கேரள வீரர்களின் கோல் முயற்சியை தடுத்தனர்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் 45வது நிமிடத்தில் கேரள அணியின் டாக்னல் தனது முதல் கோலை பதிவு செய்தார். அதன் பின்னர் 60வது நிமிடத்தில் வாட் கோல் அடித்தார்.

புனே வீரர்கள் கோல் வாய்ப்புகளை தவறவிட்டனர். இதனால், இறுதியில் கேரள அணி 2-0 என வெற்றி பெற்றது.

இதன்மூலம் கேரள அணி 2 வெற்றி, 2 சமநிலை மற்றும் 4 தோல்வி யுடன் 8 புள்ளிகள் பெற்று 7 ஆவது இடத்திற்கு முன்னேறியது.(க)

## பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ரபேல் நடால் தோல்வி



பாரிஸ்மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் - ரபேல்நடால் (ஸ்பெயின்) ஜோடி பரிதாபமாக தோற்று வெளியேறியது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்றுவரும் இந்தப்போட்டியில் பயஸ்-நடால்ஜோடி 3-6, 4-6 என்ற நேர்செட்களில் பிரிட்டனின் டொமினிக இங்லாட்-சுவீடனின் ராபர்ட்லின்ட்ஸ்டெட் ஜோடியிடம தோல்வி கண்டது.

சமீபகாலமாக கலப்பு இரட்டையர் பிரிவில மார்ட்டினா ஹிங்கிஸ உடன் சேர்ந்து அவுஸ்திரேலியா ஓபன், விம்பிள்டன் மற்றும அமெரிக்க ஓபனை வென்றார்.

ஆனால், இரட்டையர் பிரிவில் பெரிய அளவில் பட்டங்கள வெல்லா விடினும், பயஸ தனது ஜோடியை மட்டும் அடிக்கடி மாற்றி வருகிறார். அந்தவகையில் இந்த போட்டியில் நடாலுடன் இணைந்து விளையாடினார். பயஸ் - நடால்ஜோடி சேர்ந்து விளையாடிய முதல்போட்டி தோல்வியில் முடிந்தது.ரசிகர்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

இதனிடையே, ரோகன்போபண்ணா (இந்தியா) - புளோரின மெர்ஜியா (ரோமானியா) ஜோடி 2வதுசுற்றில் 6-7 (3-7), 6-4, 10-5 என்ற செட்கணக்கில்கபால் - ராபர்ட் ஜோடியை வீழ்த்தியது. (க)

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இலங்கை இருபது-20 அணி அறிவிப்பு




மேற்கிந்தியதீவுகள அணிக்கு எதிரான இருபது-20 தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் டெஸ்ட், ஒருநாள் தொடரை இலங்கை அணி கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் 2 போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரின முதல போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதியும், 2ஆவது போட்டி 12 ஆம் திகதியும் நடைபெறவிருக்கிறது.

இதற்கான இலங்கை அணியை இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. இதில்மோசமான பார்ம் காரணமாக அணியில் இருந்து ஒதுங்கி இருந்த சகலதுறைவர் திசர பெரேரா இடம்பெற்றுள்ளார்.


அதேபோல இந்த ஆண்டு ஜூலை - ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த இருபது-20 போட்டியில் இடம் பெறாமல் இருந்த சந்தி மால் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

அதேபோல துஷ்மந்த சமீரா இடம் பெற்றுள்ளார். ஆனால் திரிமன்னே இந்த அணியில் இருந்து கழற்றி விடப்பட்டுள்ளார்.

இலங்கைஇருபது-20அணிவிபரம்-

மலிங்கா, மத்யூஸ், டில்ஷான், குஷால்பெரேரா, ஷேஹான் ஜெயசூரியா, சிறிவர்த்தன, சமீராகபுகேடரா, தினேஷ் சந்திமால், கித்துருவான், துஷ்மந்தசமீரா, குலசேகரா, சேனாநாயக்க, ஜெப்ரிவந்தர்சே, பெர்னாண்டோ, திசரபெரேரா. (க)

# சயித் அஜ்மல் மீது ஒழுங்கு நடவடிக்கை



பாகிஸ்தான்கிரிக்கெட்அணியின் சுழற்பந்து வீரர் சயித் அஜ்மல். கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் முறைகேடான பந்துவீச்சால் இவரது பந்து வீச்சுக்கு தடைவிதிக்கப்பட்டது. ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்) விதிமுறைப்படி 15 டிகிரிவரை முழங்கையை மடக்கலாம். ஆனால் அஜ்மல் வீசும் அனைத்து பந்துகளும விதிமுறைகளை மீறும் வகையில் இருந்தது.

5மாதங்களுக்கு பிறகு அவரது பந்து வீச்சுக்குஐ.சி.சி.அனுமதி அளித்தது. பந்துவீச்சு முறையை மாற்றி அமைத்த பிறகு அஜ்மல் தாக்கத்தை ஏற்படுத்தாததால் பாகிஸ்தான் அணியில் இடம்பெற இயலவில்லை.

இந்த நிலையில் இந்திய சுழற்பந்து வீரர்கள் அஸ்வின், ஹர்பஜன் சிங் ஆகியோரின் பந்துவீச்சு முறையற்றதாக இருப்பதாகவும், அவர்கள் மீது ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்கா மல் இருப்பது ஏன்? என்றும் சயத் அஜ்மல் சமீபத்தில கேள்வி எழுப் பினார்.

ஹர்பஜன், அஸ்வின்பந்துவீச்சை சோதனைக்கு உட்படுத்தினால் 15 டிகிரிக்கும் அதிகமாக முழங்கையை மடக்குவதை காணலாம் என்று கூறினார்.இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கு ஆதரவாக ஐ.சி.சி.செயறபடுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். இது கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதற்கிடையே ஐ.சி.சி.கொள்கை விவகாரங்களை விமர்சித்த சயத் அஜ்மல் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய நிர்வாகி ஒருவர் கூறும்போது, வீரர்களின் நடத்தை விதிமுறைகளை சயத் அஜ்மல் மீறியுள்ளார். இதனால் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அஜ்மலிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ அனுப்பப்பட்டுள்ளது. விளக்கம் பெற்ற 48 மணி நேரத்துக்கு பிறகு அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். (க)

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் அரசு விசாரணை செய்ய வேண்டும்

## வடக்கு மாகாணசபையில் தீர்மானம்

தென்னிலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது போன்று, யுத்தத்திற்கு முனனர் வடக்கு கிழக்கினை சேர்ந்த ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை தொடக்கம் இறுதியாக வலம்புரி பத்திரிகையின் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் வரை புதிய அரசு விசாரணை மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கோரும் தீர்மானமொன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், அ.பரஞ்சோதி ஆகியோரால் பிரேரணை கொண்டுவரப்பட்டு உறுப்பினர்கள் அனைவரதும் ஆதரவுடன் நிறைவேற்றபபட்டுள்ளது.

கடந்த அரசு பதவியிலிருந்தபோது நடைபெற்றதாக கருதப்படும் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் படுகொலை சம்பந்தமாக தற்போதைய அரசாங்கம் மீள எடுத்து விசாரித்து வருவதை இந்த சபை பாராட்டுவதோடு, அவ்வாறே தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் பிரகீத் எக்னெலிகொட, லசந்த விக்கிரமதுங்க ஆகியோரது படுகொலைகளும் தற்போது விசாரிக்கப்படுகின்றன.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் பல ஊடகவியலாளர்கள் கடந்த அரசின் காலத்தில் படுகொலை செய்யப்பட்டும் தாக்கப்பட்டும் கடத்தப்பட்டும் ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டு உள்ளன. ஆனால் அது பற்றி உரிய விசாரணை நடாத்தப்படாமல் காலங் கடத்தப்பட்டு வந்தமை யாவரும் அறிந்தமையே.

எனவே இது தொடர்பிலும் புதிய அரசு விசாரணை மேற்கொண்டு நீதியினை வழங்க வேண்டும்.

ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இனங்காணப்பட்ட போதிலும் அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை, மற்றும் இறுதியாக வலம்புரி பத்திரிகையின் ஊடகவியலாளர் உதயராசா சாளின் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. ஆகவே இந்த இறுதி தாக்குதல் வரையான காலப்பகுதிக்குள் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என பிரேரணையை முன்மொழிந்தனர்.

இதனையடுத்து உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பிரேரணையின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதம மந்திரி, சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலை அமைச்சர், சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (எ-4)

# மாகாணசபை உறுப்பினர்களுக்கு சம்பள அதிகரிப்பு தேவை

## சபையில் நேற்றுக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு அதிகரித்த சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவு, மருத்துவ காப்புறுதி, எரிபொருள் கொடுப்பனவு ஆகியன வழங்கப்பட வேண்டும் என சபையில் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கு மாகாணசபையின் 37ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது எதிர் கட்சித் தலைவர், முதலமைச்சரிடம் எழுப்பிய சம்பளக் கொடுப்பனவு தொடர்பான கேள்வி மீதான விவாதத்திலேயே உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர். ஏனைய மாகாணங்களில் எதிர்கட்சித் தலைவருக்கு 63 ஆயிரத்து 500 ரூபாய் அடிப்படைச் சம்பளமாக வழங்கப்படுகின்றது. ஆனால இங்கு எனக்கு 27 ஆயிரத்து 500 ரூபாய் தான் வழங்கப்படுகின்றது என்று எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

அத்துடன் ஒரே சுற்றுநிருபத்தின் அடிப்படையில் ஒரே நாட்டினுள் எவ்வாறு வேறுபட்ட சம்பளம் வழங்கப்பட முடியும் என்றும் கேள்வி எழுப்பினார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ப.சத்தியலிங்கம், அப்படியாயின் அந்த மாகாணங்களில் அமைச்சர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கின்றார்கள் என்பதை அறிய வேண்டும் எனத் தெரிவித்தார்.

அந்த மாகாணங்களில் எதிர்கட்சித் தலைவருக்கு கொடுக்கப்படும் அடிப்படைச் சம்பளமே இங்கு அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்தார்.

நாங்கள் வருவதற்கு முன்னரே இவ்வாறு தான் சுற்றுநிருபங்கள் ஊடாக கொடுப்பனவுகளை வழங்கினார்கள் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், எதிர் கட்சித் தலைவரின் கோரிக்கை நியாயமானது என்று குறிப்பிட்டார். அமைச்சர் டெனீஸ்வரன் உரையாற்றுகையில், எரிபொருள் கொடுப்பனவை குறைத்தால் நாங்கள் மக்கள் சந்திப்புக்களை குறைக்க வேண்டி வரும் என்று தெரிவித்தார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவிக்கையில், ஊடகங்கள் ஆரம்பத்தில் மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஆடம்பர கார் வழங்கப்படப் போவதாக எழுதினார்கள். ஆனால் இன்று வரை எங்களுக்கு அப்படி எதுவும் வழங்கப்படவில்லை. மத்திய மாகாணத்தில், அங்குள்ள மாகாண சபைக்குச் சொந்தமான மேலதிக வாகனங்களை எடுத்து மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டினார். அத்துடன், மக்களை மழைக்குள்ளும் சென்று சந்திக்க வேண்டி இருக்கின்றது.

மோட்டார் சைக்கிளிலேயே செல்கின்றோம். காய்ச்சல் என்ற ஒன்று வந்தால் 2 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்ய வேண்டி இருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவை இல்வசமாக வழங்கப்படுவதைப் போன்று மாகாணசபை உறுப்பினர்களுக்கும் மருத்துவச் சேவை இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆளுங்கட்சியின் உறுப்பினரான சிராய்வா கருத்துத் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் இருக்கின்றது. இங்கு எமது மாகாண சபை உறுப்பினராக இருந்து உயிரிழந்த கனகசுந்தரசுவாமிக்கு என்ன வழங்கப்படுகின்றது. எனவே மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை வடக்கு மாகாணசபை முன்னோடியாக ஆரம்பிப்பது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (எ-4)

## இளைஞர் பாராளுமன்ற தேர்தல் நாளை

(யாழ்ப்பாணம்)

இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் நாளை ஏழாம் திகதி யாழ் மாவட்டத்தில் உள்ள பதினைந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைபெறவுள்ளது.

பத்து தேர்தல் தொகுதிகளை கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் இம் முறை இருபத்து இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளார்.

இத் தேர்தலில் 2015-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட அனைத்து இளைஞர் கழக அங்கத்தவர்களும் அவர்களுடைய பிரதேச செயலகங்களில் காலை 8 மணி முதல் மாலை 3.00 மணி வரை தங்களது வாக்கினை பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் கேட்டுக் கொண்டுள்ளது. (எ-12)

## தமிழ் அரசியல்...

தமிழ் அரசியல் கைதிகள் 32 பேர் விடுதலை செய்யப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் சிலர் மற்றும் சட்டமா அதிபர் அலுவலகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளையும் சந்திந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது கைதிகளின் விடுதலை தொடர்பில் முக்கிய பல விடயங்கள் உரையாடப்பட்டது. இதன் போது எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் 32 கைதிகளை விடுதலை செய்வதாக கூறியுள்ளனர்.

ஏனையவர்களில் சிலரை எதிர்வரும் 20-ம் திகதிக்கு முன்னதாக விடுவிப்பதாகவும் குற்றவாளியாக இணங்காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட 48 பேருக்கு ஜனாதிபதி மூலமாக பொது மன்னிப்பு வழங்கப்பட்டால் தான் அவர்களை விடுவிக்க முடியும்.

ஏனைய கைதிகளை ஆராய்வதற்கு ஒரு அமைச்சர்குழு நியமிக்கப்பட்டு அந்தக்குழு சட்டரீதியான முறையை மட்டும் பின்பற்றாமல் அரசியல் ரீதியாகவும் பரீட்சித்து அக்குழு முடிவினை எடுக்க வேண்டும் அந்தக்குழு விரைவில் இயங்கும் என எதிர்பார்க்கிறேன்.

இந்த கூட்டத்தின் பின்னர் நாம் ஜாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடினோம். குற்றவாளியாக இணங்கானப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் அவர்களுக்கான பொது மன்னிப்பை வழங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்டோம்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சில நாட்கள் தான் நாட்டில் இருக்க மாட்டேன். ஆகவே நான் எனது பயணத்தினை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் இவ்விடயம் தொடர்பில் நன்கு ஆராய்ந்து முடிவெடுப்பதாக எம்மிடம் உறுதியளித்துள்ளார். (எ-12)

## நாடு திரும்பினார்...

றிகரமாக முடித்துக்கொண்டு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்து பிரதமர் ஜெனரல் பிரயுத் சன் ஓ சா அவர்களின் அழைப்பையேற்று ஜனாதிபதி கடந்த முதலாம் திகதி தாய்லாந்துக்குப் பயணமாகியிருந்தார்.

தாய்லாந்தின் சுவர்ணபூமி விமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதியை தாய்லாந்து பிரதிப் பிரதமர் சொங்கிப் ஜதுஸ்ரி கிடக், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை வரவேற்றனர். ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் அணிவகுப்பு மரியாதையொன்றும் வழங்கப்பட்டது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி தாய்லாந்து பிரதமர் ஜெனரல் பிரயுத் சன் ஓ சாவை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். இந்த பேச்சுவார்த்தைகள் இரண்டு நாடுகளுக்குமிடையேயான அரசியல மற்றும் கலாசார உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் தாய்லாந்துக்கான இந்த விஜயம் இரண்டு நாடுகளுக்கிடையேயான கலாசார மற்றும் சமய உறவுகளை மேலும் பலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## போர்க்குற்ற விசா...

ஸ்தானிகர் ரொபின் மூடி தெரிவித்துள்ளார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் போர் உட்பட்ட இராணுவ மோதல்கள் குறித்த சட்டத்திட்டங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமானது.

இந்தநிலையில் கடந்த நான்கு வருடங்களில இலங்கை, உரிய பொறிமுறை தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்திவந்தமை பாராட்டத்தக்கது.

அத்துடன் தொடர்ந்தும் நல்லாட்சியில் சிறப்பான அம்சங்கள் நடந்தேற அவுஸ்திரேலியா உதவும் என்றும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (எ-12)

## ஐ.நா குழு வடக்...

பலவந்த கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் எதிர்வரும் 9-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

அரசாங்கத்தின் அழைப்பிற்கு அமைய இந்தப் பிரதிநிதிகள் இலங்கை விஜயம் செய்ய உள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவின் கடந்த அரசாங்க ஆட்சிக் காலங்களில் இந்த பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பலவந்த கடத்தல்கள் காணாமல்போதல்களை தடுக்க தற்போதைய அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதனை பிரதிநிதிகள் ஆராய உள்ளனர்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல், உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுதல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட உள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மாத்தளை, திருகோணமலை, அம்பாறை மற்றும் காலி ஆகிய பகுதிகளுக்கு இந்தப்பிரதிநிதிகள் விஜயம் செய்ய உள்ளனர்.

அரச அதிகாரிகள், காணாமல் போனவர்களின் உறவினர்கள், சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் சந்திக்க உள்ளனர். (எ-11)

## தனித்து போட்டியிட்டு ஸ்ரீ.சு.கவால் வெல்ல முடியாது

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் தனித்து தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாதென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்காக முன்னணியின் அனைத்து கட்சிகளுடனும் இணைந்து செயற்படுவது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னணியில் எந்த ஒரு கட்சியையும் நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாதென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## சுமார் 12 கோடி...

மாகாணத்திலுள்ள போரினால் பாதிக்கப்பட்டவர்கள், விதவைகள், அநாதைச் சிறுவர்கள், மாற்றுவலுவுள்ளோர்கள் ஆகியோருக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்காக பிரதம செயலாளரின் ஆலோசனையுடன், அமைச்சர் வாரியம், ஆளுநர் ஆகியோரின் அங்கீகாரத்துடன் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் வடமாகாணசபையின் 37வது அமர்வில் முதலமைச்சர் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் அவைத் தலைவருக்கும் இடையில் இந்நிதியினை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பில் முறுகல் நிலை உருவாகி பின்னர் அவைத்தலைவரின் சிபார்சு சபையில் ஒத்துக்கொள்ளப்பட்ட நிலையில் முறுகல் நிலை தணிந்தது.

மாகாணசபையின் 37ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றிருந்த நிலையில் கடந்த் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபை தேர்தலுக்கு 10 தினங்களுக்கு முன்னதாக மாகாண விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், காணி திணைக்களம், கூட்டுறவு திணைக்களம், ஆளுநர் செயலகம் ஆகியவற்றிலிருந்த, சுமார் 11 கோடியே 62 லட்சத்து 92ஆயிரத்து 560 ரூபாய் நிதி ஆளுநர் தற்துணிவு நிதியத்திற்கு மாற்றப்பட்டமை தொடர்பாக மாகாண பொதுக்கணக்குகள் குழு கண்டுபிடித் துள்ளதுடன் குறித்த நிதியையும் அதற்கான வட்டியையும் எங்கிருந்து நிதி எடுக்கப்பட்டதோ அங்கேயே மீளவும் ஒப்படைக்கவேண்டும் என கூறியிருக்கின்றது.

இந்நிலையில் குறித்த நிதியை அந்தந்த அமைச்சு மற்றும் திணைக்களங்கள் வடமாகாணத்திலுள்ள போரினால் பாதிக்கப்பட்டவர்கள், விதவைகள், அநாதை சிறுவர்கள், மாற்றுவலுவுள்ளோர்கள் ஆகியோருக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்காக பிரதம செயலாளரின் ஆலோசனையுடன், அமைச்சர் வாரியம், ஆளுநர் ஆகியோரின் அங்கீகாரத்துடன் சபை அங்கீகாரத்தையும் பெற்று நிறைவேற்றலாம் என அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் சிபார்சு ஒன்றினை சபையின் ஒப்புதலுக்காக முன்மொழிந்திருந்தார்.

இந்நிலையில் எழுந்த முதலமைச்சர் நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? எதற்குப் பயன்படுத்தவேண்டும்? என்பதை அமைச்சர் வாரியம் முடிவும் செய்யும். அதனை எவ்வாறு? எதற்கு? என கூறவேண்டிய அவசியமில்லை என சபையில் கூறினார். இதனையடுத்து மாகாணசபை உறுப்பினர் சர்வேஸ்வரன் எழுந்து குறித்த சிபார்சுக்கு சபை அங்கீகாரம் பெற்றால் அதனையே அமைச்சர்கள் செய்யவேண்டும்.

இல்லையென்றால் அது சபையை அவமதித்த செயலாகிவிடும். எனவே அமைச்சர் வாரியத்திடமே அதனை விட்டுவிடுங்கள் என கூறினார். மேலும் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் எழுந்து குறித்த விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்றே கூறப்பட்டிருக்கின்றது.

அதற்காகவேதான் நாங்கள் இந்த சபைக்கும் வந்திருக்கிறோம். எனவே அந்த நிதியை அவ்வாறே பயன்படுத்தலாம் என கூறினார். இந்நிலையில் தொடர்சியாக இந்த விடயம் சபையில் மாறி, மாறி பேசப்பட்ட நிலையில் ஒருவாறாக சிபார்சு சபையில் ஒத்துக் கொள்ளப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்பட்டு குழப்பம் தீர்வுக்குவந்தது. (எ-4)

## கைதிகளின்...

வரை அவர்களின் விடுதலை தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டு நிரந்தரமான தீர்வு எட்டப்படவில்லை. கைதிகளின் விடுதலை தொடர்பில் பலரும் முரண்பட்ட கருத்துகளை தெரிவித்து வந்தாலும் கூட, தங்களின் உண்மையான நிலைப்பாட்டை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே எமது மக்களின் எதிர்பார்ப்பாகும். கைதிகள் தமது உடனடி விடுதலையை வலியுறுத்தி கடந்த மாதம் 10ஆம் திகதி அன்று ஆரம்பித்த சாகும் வரையிலான உண்ணாநிலை போராட்டம் 17ஆம் திகதி வரை தொடர்ந்தபோது தாங்கள், அரசியல் கைதிகளும் அவர்களது குடும்பங் களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை நவம்பர் 7க்கு முன்பாக பெற்றுக்கொடுப்ப தாக கூறிய வாக்குறுதியை நம்பி, எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தன் அவர்கள் தங்களின் வாக்குறுதியை கைதிகளுக்கு தெளிவுபடுத்தியதன் காரணமாக தற்காலிகமாக உண்ணாநிலை போராட்டத்தை அரசியல் கைதிகள் முடிவுக்கு கொண்டு வந்திருந்தனர்.

ஆனால் இன்று வரை கைதிகளின் விடயத்தில் எவ்விதமான முன்னேற்றமும் காணப்படவில்லை. பல ஆண்டுகளாக பல்வேறு துன்பங்களோடு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள், இவ்வாண்டு ஜனவரி 8 அன்று ஒன்றுசேர்ந்து ஜனநாயக ரீதியாக ஒரு புரட்சியை ஏற்படுத்தி தங்களின் தலைமையில் ஒரு நல்லாட்சி புதிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளார்கள்.

இந்த நல்லாட்சியில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் ஒன்றாகிய அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு இன்றுவரை முடிவு காணாமலிருப்பது எமக்கு மிகுந்த அவநம்பிக்கையையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது. 8 முதல் 20 வருடங்களாக நீதிக்கு புறம்பாக சிறைச்சாலைகளில் வதைபடும் எமது உறவுகளான அரசியல் கைதிகளின் பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுகி, விரைவாக ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (எ-11)

## அடிப்படை...

போது இலங்கைக்கு சாதகமான சூழல் காணப்படுவதாகவும் பிரதமர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலம் நிலவுகின்ற பொருளாதாரப் பிரச்சினைக்கு தேசிய அரசாங்கத்தின் ஊடாக தீர்வு காணப்படும்.

வாழ்வாதாரத்தை அதிகரிக்க முடியாமை, பிள்ளைகளை வளர்ப்பதில் சிக்கல் மற்றும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கத் தயாராகவுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தினை அவர்களுக்கு வழங்க முடியும் எனவும் பிரதமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து மக்களுக்கான எதிர்காலதிட்டங்கள் குறித்து உரையாற்றிய பிரதமர்,

■ பத்து ஆண்டுகளுக்கு மேல் அனுமதிப்பத்திர காணிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்கு நிரந்தர காணி உறுதி வழங்கப்படும்.

■ பத்து ஆண்டுகளுக்கு மேல் அரசாங்க வாடகை வீடுகளில் வாழ்ந்து வருவோருக்கு நிரந்தர வீட்டு உரிமை வழங்குதல்.

■ பெருந்தோட்ட பகுதிகளில் பத்து ஆண்டுகளுக்கு மேல் லயன் அறைகளில் வாழந்து வரும் மக்களுக்கு சிறிய காணித் துண்டுகள் மற்றும் வீடுகள் வழங்கப்படும்.

■ ஊழியர் சேமலாபநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியனவற்றை இணைத்து தேசிய ஒய்வூதிய நலன்புரி நிதியம் ஒன்று உருவாக்கப்படும்.

■ 2020ல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 3.5 வீதமாக குறைக்கப்படும்.

■ அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இலவச வைபை வசதி அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக் கணினிகளை வழங்க மூன்று வருடங்களுக்கு வட்டியில்லாக் கடன் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் இதற்கான மானிய நிதி எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

■ அரச விடுதிகளில் 10 வருடங்களுக்கு மேல் தங்கியுள்ள சுமார் மூன்று மில்லியன் பேருக்கு அதற்கான உறுதி வழங்கப்படும்.

■ புத்தகங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கான இறக்குமதி வரி நீக்கப்படும்.

அத்துடன் லயன் அறைகளில் 10 வருடங்களுக்கும் மேலாக வசிக்கும் தோட்ட மக்களுக்கு சிறிய இடம் அல்லது வீட்டு உரிமை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இதன் பொருட்டு உரிய சட்ட விதிகள் விரைவில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## சம்பந்தனின்...

டத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

எனினும் விடுவிக்கப்படவுள்ளவர்களின் விடயத்தில் தாம் எதிர்ப்பை வெளியிடவில்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ள னர்.

ஏற்கனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள மேல் நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள 169பேர் மற்றும் தண்டனை பெற்றுள்ள 48 பேர் தொடர்பில் உரியத்தீர்வை பெற்றுக் கொடுப்பதாக தம்மிடம் உறுதியளித்தது.

இந்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டே தாம் உண்ணாவிரதத்தை கைவிட்டதாகவும் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் தற்போது விடுவிக்கப்படவுள்ளவர், ஏற்கெனவே குற்றங்கள் நிரூபிக்கப்படாமல் இயல்பாகவே விடு விக்கப்படவிருந்தவர்கள் என்பதை நீண்ட கால அரசியல் கைதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே முன்கூட்டிய திட்டமிடப்பட்ட ஒழுங்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது என்று சந்தேகம் தமக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடக்கோரி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டதாக கூறப்பட்ட உறுதிமொழிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்று வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அது மீறப்பட்டுள்ளது என்பதை அரசியல் கைதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில் தமக்கு கிடைத்த தகவல்களின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், பொதுமன்னிப்பு என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடமோ அல்லது பிரதம மந்திரியிடமோ நேரடியாக கேட்கவில்லை என்றும் தமிழ் அரசியல் கைதிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய அறிவிப்பினால் ஏமாற்றமடைந்துள்ள தாம், தமது விடுதலையை நோக்கிய பயணத்துக்காக மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தமிழ் அரசியல் கைதிகள் எச்சரித்துள்ளனர். (எ-11)

## எச்.என்.டி.ஏ...

வர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் மூலம் தீர்வை பெற்று கொடுக்கும் வகையில் இந்த அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி இந்த விடயத்தினை வலியுறுத்தி கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள், பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அறிவினால்...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்து தமிழர்கள் அழிந்து விட்டார்கள் என உலகம் நினைத்தது. ஆனால் இன்று உலகத்தை ஆட்டிக் கொண்டிருக்கின்ற அதாவது ஆயுத யுத்தத்தினால் சாதிக்க முடியாததை அறிவு யுத்தத்தினால் அவர்கள் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்கு தமிழர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்களோ, அறிவு என்ற ஒன்றை மட்டும் எடுத்து உலக முழுவதும் வியாபித்தார்கள்.

இன்று அறிவுடன் கூடிய தந்திரோபாயங்களுடன் கூரிய ஆயுத யுத்தத்தைவிட, கூரிய அறிவுடன் கூடிய யுத்தமாக செய்யக் கூடிய சிந்தனைகளோடும், செயற்பாடுகளோடும் மீண்டும் திரும்பி வந்திருக்கின்றார்கள் என தெரிவித்தார். (எ-11)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.